இறைவன் மனிதர்களுக்கு கணக்கின்றி தன் அருள்களை வழங்குகின்றான். ஆனால் மனிதன் தான் அவற்றை வீணடித்து விடுகிறான். உலகிலுள்ள எந்த ஒரு பொருளும் அது பயன்படுத்தப்படவில்லையென்றால் அல்லது பராமரிக்கப்-படவில்லை என்றால் நிச்சயம் கெட்டுப் போய் விடும். பயன்படுத்தப்படும் போது அல்லது பராமரிக்கப்படும் போது நன்றாகவே இருக்கும்.

உடலை முறையாகப் பராமரிக்காததால் தானே சுகர், பிரஷர் போன்ற பெரும் நோய்களெல்லாம் ஏற்படுகின்றன. இது போலவே ஈமான் என்பதும் தொழுகை கொண்டு பாதுகாக்கப்படவில்லையெனில் அது கெட்டுப் போகும் என்பதில் சந்தேகமில்லை.

**"தொழுகை என்பது மார்க்கத்தின் தூண்"** என்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்".

கட்டிடத்திற்கு எவ்வாறு தூண் அவசியமோ அவ்வாறே மார்க்கத்திற்கு, ஈமானுக்கு தொழுகை அவசியம். மற்றொரு ஹதீஸில், யார் தொழுகையை விட்டாரோ அவருக்கு தீன் இல்லை என்று வருகிறது. இது போன்ற பல்வேறு ஹதீஸ்கள், தொழாதவர்கள் முஸ்லிம்களாக இல்லை எனும் கருத்தில் வருகின்றன.

மார்க்க சட்ட மேதைகள் தொழாதவர்கள் காஃபிர்கள் என கூறவில்லையென்றாலும் தொழுகையே இல்லாத மனிதரிடமிருந்து சிறிது, சிறிதாக ஈமான் அகன்று இறுதியில் இல்லாமலேயே போய் விடுவதை நாம் பார்க்கலாம்.

மனிதர்களிடம் நாளை மறுமையில் கேட்கப்படும் கேள்விகளில் முதல் கேள்வி தொழுகையைப் பற்றித்தான். "அடியானிடம் கேட்கப்படும் முதல் கேள்வி தொழுகையேயாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

தொழுகையில்லாதவர்களுக்கு நாளை மறுமையில் கேள்வி கேட்கப்படுவதும், தண்டனை கொடுக்கப்படுவதும் உண்டு. அது போல் தொழாதவர்களுக்கு இந்த உலகிலேயே தண்டனை கொடுக்கப்படுவது பற்றியும் ஹதீஸில் வந்துள்ளது.

உகைல் இப்னு அபீ தாலிப் எனும் ஸஹாபி சொல்கிறார்கள். நான் நபியின் சொந்தக்காரராக இருந்தும் ஆரம்ப காலத்தில் நபியை ஈமான் கொள்ளாமல் இருந்தேன். பிற்காலத்திலேயே நான் நபியை ஈமான் கொண்டேன். அவ்வாறு நான் நபியை ஈமான் கொள்வதற்கு மூன்று காரணங்கள் உண்டு. அம்மூன்றும் மூன்று சந்தர்ப்பங்களில் நடந்த மூன்று அதிசயங்கள்.

**ஒன்று :**

நான் நபியுடன் ஒரு பிரயாணத்திலிருந்தேன். அப்பிரயாணத்தின் போது நபியவர்களுக்கு சுய தேவையை நிறைவேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. திறந்த வெளியில் மலம் கழிக்கவோ, ஜலம் கழிக்கவோ ஒரு போதும் நபி செய்ததில்லை. இருப்பினும் அப்போது அவ்விடத்தில் மரங்கள் என்பதே இல்லை. வெகு தூரத்தில் ஒரு மரம் இருந்தது. நபியவர்கள் அம்மரத்தைச் சுட்டிக் காண்பித்து மரமே! உன்னை நபி அழைக்கிறார்கள் என்று கூறி அழைக்கும் படி நபி என்னிடம் கூறினார்கள். அவ்வாறே நானும் அம்மரத்தை



அழைக்க மரம் அப்போது நடந்து வந்த அதிசயத்தைப் பார்த்து நான் அளவுக்கதிகமாகவே பிரமித்துப் போனேன்.

**இரண்டு :**

மற்றொரு சமயம் நான் நபியின் பிரயாணத்தில் இருந்த போது ஒரு நேரம் எனக்குக் கடுமையான தாகம் ஏற்பட்டது. எங்கு தேடியும் தண்ணீர் கிடைக்கவே இல்லை. என் தாகத்தை நான் நபியிடம் முறையிட்டேன். அப்போது நபியவர்கள் ஓர் மலையைக் காண்பித்து அம்மலைக்கு நான் ஸலாம் சொன்னதாகவும், தண்ணீர் இருப்பின் அதனைத் தருமாறும் நான் கூறியதாக கூறுங்கள் என்றார்கள். அவ்வாறே நானும் அம்மலையிடம் சென்று நபி சொன்னது போலவே சொன்னேன். அதற்கு அம்மலை;

**ஈமான் கொண்டோரே! உங்களையும், உங்கள் குடும்பத்தையும் நரக நெருப்பை விட்டும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதன் எரிபொருள் மனிதர்களும், கற்களுமாகும் (66-6).**

எனும் வசனம் இறங்கியதிலிருந்து அழுது அழுது என்னிலிருந்த தண்ணீரெல்லாம் கண்ணீராய் வழிந்தோடி விட்டது. ஆதலால் என்னிடம் தண்ணீர் இல்லை என்று கூறி விட்டது. இது நபியின் மூலம் நான் கண்ட இரண்டாவது அதிசயம்.

**மூன்று :**

ஒரு சமயம் நான் நபியுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு ஒட்டகம் மிரண்டடித்து ஓடி

வந்தது. வந்த வேகத்தைப் பார்த்த போது அது நபியைத் தாக்கி விடுமோ என்கிற அச்சம் எனக்குள் ஏற்பட்டது. உடனே அந்த ஒட்டகத்தைப் பிடிக்க முனைந்தேன். ஆனால் நபி அவர்கள் அதனைப் பிடிக்க வேண்டாமென்று என்னிடம் சொல்ல நானும் அதனைப் பிடிக்காமலேயே விட்டு விட்டேன். கட்டுக்கடங்காமல் ஓடி வந்த அந்த ஒட்டகம் நபிக்கருகில் வந்ததும் உடனே அமைதியானது. அடக்கமாக நபி அருகிலேயே போய் நின்றது. எனக்கோ ஆச்சர்யம் அதன் பின் ஒருவர் வாளுடன் வந்து நின்றார். யாரஸூலல்லாஹ்! நான் இந்த ஒட்டகத்தை அதிக விலைக் கொடுத்து வாங்கினேன். ஆனால் இந்த ஒட்டகம் எனக்குக் கட்டுப்படுவதில்லை அதனால் இதனை அறுக்க முனைந்தேன். என்னிடமிருந்து தப்பி ஓடி வந்து விட்டது என்று கூறி முடித்தார். இதைக் கேட்ட நபியவர்கள் அதற்கான காரணத்தை ஒட்டகத்திடம் கேட்ட போது நபியின் காதருகில் தம் வாயை ஒட்டகம் கொண்டுச் சென்றது. எதையோ சொல்வது போன்றிருந்தது. அதன் பின் நபியவர்கள், நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் இஷா தொழாமல் தூங்கி விடுகிறீர்களா? என்று அந்த மனிதரிடம் கேட்டார்கள். அந்த மனிதர், ஆம் நாங்கள் இஷா தொழாமல்தான் தூங்குகிறோம் என்றார்கள். இஷா தொழாமல் தூங்கும் உங்கள் மீது இறங்கும் வேதனையை ஒட்டகம் பயப்படுவதாகவும், இனிமேல் நீங்கள் இஷா தொழுவதாக இருந்தால் உங்களுடன் அதனை அனுப்பி வைக்குமாறும் ஒட்டகம் கூறுகிறது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.



மேற்கூறிய மூன்று நிகழ்வுகள் தான் நான் இஸ்லாத்தை தழுவுவதற்கான காரணங்கள் என்று உகைல் அவர்கள் கூறினார்கள். இம்மூன்று நிகழ்வுகளில் முதல் நிகழ்வில் நபியின் உத்தரவுக்கு மரம் கட்டுப்படுகிறது. இது போன்று நாம் அல்லாஹ்வின் உத்தரவுக்கும், நபிக்கும் கட்டுப்படுகிறோமா? என்பதும், இரண்டாம் நிகழ்வில் மலை பயம் கொள்வதாக கூறுகிறதே! மலைக்கு இருக்கும் பயமாவது நமக்கிருக்கிறதா? என்பதும், மூன்றாம் நிகழ்வில் தொழாதவர்களுக்கு இறங்கும் வேதனைக்குறித்து ஒட்டகம் பயம் கொள்கிறதே அது போன்ற பயம் நமக்கிருக்கிறதா? என்பதும் நாம் சிந்திக்க வேண்டிய விஷயங்களாகும்.

ஐந்து நேரத் தொழுகைகளில் ஒரிரு வேளைகளை விட்டு விடக் கூடிய தொழுகையாளிகளுக்கும் மூன்றாம் நிகழ்வில் நல்லதொரு படிப்பினை இருக்கிறது.

நரகத்திலிருந்து காக்கப்படுவதற்கும், சுவனவாதிகளாக ஆகுவதற்கும் நாம் தொழுகையாளிகளாக மாறி விட வேண்டும். நாம் தொழுவதுடன் நம் குடும்பத்தையும் தொழும்படி ஏவி விட வேண்டும்.

தொழுகையாளிகளின் குடும்பமாக அல்லாஹ் நம் குடும்பத்தை ஆக்கியருள்வானாக!

## அகிலத்தின் அருள் :

அகிலத்திற்கு அருளாக அனுப்பப்பட்டவர்கள் நபியவர்கள். ஒரு முறை (ஸல்) அவர்கள் ஹழ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம், எல்லோருக்கும் நான் ரஹ்மத் என்பது எனக்கு தெரியும் ஆனால் நான் உங்களுக்கு ரஹ்மத்தாக இருக்கிறேனா? என்று கேட்டார்கள். ஆம், நீங்கள் எனக்கு ரஹ்மத்துதான். ஒவ்வொரு முஃமினுக்கும் தன் ஈமான் பறிக்கப்பட்டு விடக் கூடாது என்ற பயம் இருக்கும். அது போல் ஒவ்வொரு நபிமார்களுக்கும் தங்களின் நபித்துவம் பறிக்கப்பட்டு விடக்கூடாது என்ற பயம் இருக்கும். அது போலவே மலக்குமார்களாகிய எங்களுக்கும் மலக்கியத் பறிக்கப்பட்டு விடக் கூடாதே என்று எங்கள் ஒவ்வொருவருக்கும் பயம் உண்டு. எனக்கும் அந்த பயம் இருந்தது. உங்களுக்கு நான் வஹீ கொண்டு வரவே என்னைப் பற்றி அல்லாஹ் குர்ஆனில் இது சங்கைமிக்க தூதரின் சொல்லாகும் (81-91), என்று கூறினான். அதன் பின்னே, எனக்கு அந்த பயம் என்னை விட்டும் நீங்கி விட்டது. ஆதலால் எனக்கும் தாங்கள் ரஹ்மத்தாகவே இருக்கிறீர்கள் என்று ஹழ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறினார்கள். ஏனெனில் குர்ஆனில் ரஸூல் என்று சொல்லப்பட்டது என்றைக்கும் மாற்றப்படாது.



மாநபி (ஸல்) அவர்கள் மனிதர்களுக்கு எவ்வாறு ரஹ்மத் ஆக இருக்கிறார்களோ அது போலவே மலக்கு-களுக்கும் ரஹ்மத்தாக இருக்கிறார்கள். மனிதர்களிலும் முஃமின்களுக்கு ரஹ்மத் என்பது எல்லோரும் விளங்கிக் கொண்ட செய்தி. ஆனாலும் காபிர்களுக்கும் நபி (ஸல்) அவர்கள் ரஹ்மத்தாக இருக்கிறார்கள் என்பது தான் ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டிய செய்தி.

ஒரு நாள் அபூஜஹ்ல் கஃபாவின் திரையைப் பிடித்துக் கொண்டு அல்லாஹ்விடம் வானத்திலிருந்து நீ எங்களுக்கு வேதனையை இறக்கி விடு என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தான். மூடத் தனமான இச்செயல் நபியின் காதுகளுக்கு எட்டியது. உடனே நபி (ஸல்) அவர்கள், அபூஜஹ்ல் அறியாது துஆ செய்கின்றான். அவனது துஆவை ஏற்காதே! யாஅல்லாஹ்! என்று துஆ செய்தார்கள். நபியின் துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு, அபூஜஹ்லின் துஆவை ஏற்காது விட்டதுடன் வேதனை இறங்காது என்பதற்கான சான்றாக ஓர் அருள் வசனத்தையும் இறக்கியருளினான்.

**நபியே! தாங்கள் அவர்களுக்கிடையே இருக்கையில் அல்லாஹ் அவர்களுக்கு வேதனை கொடுப்பவனாக இல்லை. (8-33).**

மனிதர்கள் அனைவருக்கும் நபி (ஸல்) அவர்கள் அருளாக இருக்கிறார்கள் என்பது போலவே ஜின்களுக்கும் அவர்கள் அருளாக இருக்கிறார்கள்.

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடத்தில், இன்று யார் என்னுடன் வந்து ஜின்களுடன் பேசுவதற்குத் தயார் என்று கேட்ட போது, ஹழ்ரத் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்களைத் தவிர்த்து வேறு எவரும் முன் வரவில்லை. இருவரும் ஓரிடத்திற்குச் சென்றதும், நபி (ஸல்) அவர்கள் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்களை ஓர் இடத்தில் நிறுத்தி வைத்து அவர்களை சுற்றியும் வட்டமாக கோடு கிழித்து, நீங்கள் இவ்வட்டத்தை விட்டு எக்காரணம் கொண்டும் வெளியே வரக்கூடாது என்று கூறி விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றார்கள். அதன் பின் வெகு நேரம் ஆகியும் நபி (ஸல்) அவர்கள் வரவில்லை. நபியை தேடிப்புறப்படலாம் என்று ஹழ்ரத் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் எண்ணும் போது, நபியின் தடை உத்தரவு நினைவுக்கு வர, வட்டத்துக்குள்ளேயே சுபுஹ் நேரம் வரை நின்றார்கள். அதன் பின் நபி (ஸல்) அவர்கள் ஹழ்ரத் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்களிடம் வந்து ஜின்களுடன் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளை எடுத்துக் கூறினார்கள். என்னிடம் உணவு கேட்டனர். நான் உணவளித்தேன் என்று கூறி ஜின்களின் உணவாகிய விட்டையையும், எலும்பையும் அசுத்தம் செய்வதை தடுத்தார்கள். இவ்வகையில் ஜின்களுக்கும் நபி (ஸல்) அவர்கள் ரஹ்மத்தாகவே, அருளாகவே இருந்துள்ளார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியும்.



## நபியின் அன்பு :

உலகில் ஒரு மனிதன் இன்னொரு மனிதர் மீது பிரியம் கொள்ள வேண்டுமெனில் அதற்கு மூன்று காரணங்களில் ஏதோ ஒரு காரணம் அம்மனிதனிடம் இருக்க வேண்டும். மூன்று காரணங்களில் எது ஒன்றும் இல்லாமல் யாருக்கும் யார் மீதும் அன்பு என்பதோ, பிரியம் என்பதோ ஏற்படுவதற்கு பெரும்பாலும் வாய்ப்பில்லை.

மூன்று காரணங்கள் 1) அழகு, 2) உறவு, 3) உபகாரம். அழகைக் கண்டு பிரியம் கொள்ளாத மனிதர்களே இருக்க முடியாது. காதலன் காதலியின் மீது அன்பு கொள்கின்றான் என்றால் அதற்கு அழகு தான் காரணம்.

உபகாரம் செய்து விட்டால் யாருடைய அன்பையும் பெற்று விடலாம். நண்பன் ஒருவன் மற்றொரு நண்பனின் மீது அன்பு கொள்வதற்கு உபகாரம் புரிவதே அடிப்படைக் காரணம். தாய், தந்தை, சகோதரர்கள், மனைவி, மக்கள் என எல்லோரின் மீதும் நமக்கு அன்பு ஏற்படுகிறதெனில் அதற்கு உறவு முறை தான் காரணம்.

பிரியத்திற்கான காரணங்களாகத் திகழும் முக்கிய மூன்று காரணங்களுமே நபியிடம் ஒரு சேர அமைந்திருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அழகு :

உலக மாந்தர்கள் யாவரிலும் ஹழ்ரத் யூசுப் (அலை) அவர்கள் தான் அழகு மிகுந்தவர்கள். எனினும் என் அழகில் பாதி தான் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது, என்று நபி (ஸல்) அவர்களே கூறினார்கள். உலகம் தோன்றிய காலம் முதல் உலகம் அழியும் வரை உள்ளவர்களிலேயே அழகானவர்கள் யார் என்றால், அது நமது நாயகம் (ஸல்) அவர்கள் தாம்.

மக்களிலேயே நபியவர்கள் மிக அழகானவர்கள். குணத்திலும் மிக அழகானவர்கள். அவர்களைவிட அழகான ஒன்றை நான் பார்த்ததே இல்லை! என்று அல்பர்ராவு (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

உறவு :

நமக்கு நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வையும், இஸ்லாத்தையும் கற்றுத் தந்த ஆசிரியராக, ஆன்மீகத் தந்தையாகத் திகழ்கிறார்கள்.

ஒரு நாள் ஒரு யாசகர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து யாசகம் கேட்டார். நபி (ஸல்) அவர்கள் எதனையும் கொடுப்பதற்கு ஒன்றுமில்லாத காரணத்தால் யாசகரை உஸ்மான் (ரலி) அவர்களிடம் சென்று அல்லாஹுக்காகத் தருமாறு கூறுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார்கள். அந்த யாசகனும் அவ்வாறு சென்று கேட்க, உஸ்மான் (ரலி) அவர்கள் சில காசுகளை கொடுத்து அனுப்பினார்கள். அதனை



திருப்தியுராத அந்த யாசகர் மீண்டும் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அவர் தந்தது எனக்குப் போதாது. இன்னும் வேண்டும் என்று கேட்டார். நபி (ஸல்) அவர்களோ மீண்டும் உஸ்மான் (ரலி) அவர்களிடமே சென்று, அல்லாஹ்வுடைய தூதருக்காகத் தாருங்கள் என்று கேளுங்கள் என்று சொல்லி அனுப்பினார்கள். அந்த யாசகர் மீண்டும் உஸ்மான் (ரலி) அவர்களிடம் சென்று கேட்க, உஸ்மான் (ரலி) அவர்கள் முன்பை விட அதிகமாகவே கொடுத்தனுப்பினார்கள். ஆச்சர்யமுற்ற அந்த யாசகர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, யாரசூலல்லாஹ்! அல்லாஹுக்காக என்று கேட்ட போது தந்ததை விட, உங்களுக்காக என்று கேட்ட போது மூன்று மடங்கு அதிகமாகவே உஸ்மான் (ரலி) தந்திருக்கிறார்கள். அதைப்பற்றி நீங்கள் அவரிடம் விசாரிக்க வேண்டும் என்றார். நபி (ஸல்) அவர்களும் ஹழ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை அழைத்து, அதற்கான காரணம் கேட்ட போது, உயர்வும், மகத்துவமும் மிக்க ரப்புல் ஆலமீனான அல்லாஹ்வை எங்களுக்கு காட்டித் தந்ததே நீங்கள் தானே யாரஸூலல்லாஹ்! என்று ஹழ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

வார்த்தையால் வடித்து முடித்து விட முடியாத அளவிற்கு நபி (ஸல்) அவர்கள் மீது ஸஹாபிகள் பிரியம் வைத்திருந்தார்கள். அவ்வாறான பிரியம் நமக்கு ஏற்படாததற்கான காரணம் நபி (ஸல்) அவர்களுக்கும் நமக்குமிடையே உள்ள உறவு முறையை, நாம் புரிந்து கொள்ளாதது தான்.

உபகாரம் :

நபிமார்கள் ஒவ்வொருவருக்குமே ஒப்புக் கொள்ளப்படத்தக்க துஆ ஒன்று உண்டு. அந்த துஆவை ஏனைய நபிமார்கள் அனைவரும் உலகிலேயே பயன்படுத்தி விட்டனர். ஹழ்ரத் நூஹ் (அலை) அவர்கள், தம் சமுதாய மக்கள் எல்லை மீறிய போது அவர்களை அழிப்பதற்காக, பூமியில் இனி எந்தக் காஃபிரையும் விட்டு வைக்காதே என்று துஆ செய்து விட்டார்கள். அந்த துஆவின் விளைவு அவர்களின் கூட்டத்தார் வெள்ளப் பிரளயத்தால் அழிக்கப்பட்டனர். அது போன்றே ஸாலிஹ் (அலை) அவர்கள், தம் கூட்டத்தாரை அழிக்க அந்த துஆவை பயன்படுத்தினார்கள். துஆவின் விளைவால், அக்கூட்டத்தினர் இடி முழக்கத்தால் பீடிக்கப்பட்டு இறந்து போயினர். அது போன்றே லூத் (அலை) அவர்கள் தம் மக்களுக்கு எதிராக, அந்த துஆவைப் பயன்படுத்தினார்கள். அல்லாஹ் அவர்களின் மக்களை கல் மழைப் பொழியச் செய்து அழித்து விட்டான்.

அட்டூழியம் புரியும் இம்மக்கள் இனி ஒரு போதும் திருந்தவே மாட்டார்கள் என்று எண்ணி அவர்களின் கொடுமையை தாங்கிக் கொள்ள முடியாமலேயே ஒவ்வொரு நபிமார்களும் துஆ செய்து விட்டார்கள்.

நபிமார்களிலேயே மிகவும் சோதிக்கப்பட்டவர் நபி (ஸல்) அவர்கள் தாம். தாயிஃபில் கல்லால் அடிக்கப்பட்டார்கள். அந்த



நேரத்திலும் கூட நபி அந்த துஆவைப் பயன்படுத்தவில்லை. இரு மலைக்களுக்கிடையே இவர்களை நசுக்கி அழித்து விடவா என்று வானவர்கள் கேட்ட போதும் கூட, நபி (ஸல்) அவர்கள் இவர்கள் இப்போது திருந்தாது போனாலும், இவர்களின் சந்ததிகள் ஒரு காலத்தில் திருந்தி விடுவார்கள். ஆதலால் இவர்களை அழிக்க வேண்டாம் என்றார்கள்.

எல்லா நபிமார்களும் அழித்து விடுமாறு துஆ செய்திருக்க, நபி (ஸல்) அவர்கள் மட்டும், துஆ செய்யாமலேயே அழிவு தாமாக தேடி வந்த போதும் கூட, அதனை வேண்டாம் என்று தடுத்தார்கள். இதன்றி அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அந்த துஆவை மறுமையில் நமக்கு ஷஃபாஅத்தாகப் பயன்படுத்தி சுவனம் நுழையவும், நரகத்திலிருந்து பாதுகாக்கப்படவும் வழி வகுப்பார்கள்.

**ஒவ்வொரு நபிக்கும் ஓர் துஆ உண்டு. என்னுடைய துஆவை மறுமையில் என் சமுதாயத்திற்குப் பரிந்துரையாக ஆக்குவதற்கு நான் நாடுகிறேன்** என்று சொன்னார்கள்.

உபகாரங்களில் இது மிகப் பெரும் உபகாரம். இதனை இந்த உம்மத் உணர்ந்து கொண்டு, நபி (ஸல்) அவர்கள் மீது பிரியம் கொண்டு நடக்க வேண்டும். நபியின் மீது பிரியத்தை நம் அனைவருக்கும் அல்லாஹ் தந்தருள்வானாக!.

## ரஜப் மாதம் :

.. வானம், பூமி படைக்கப்பட்ட நாளில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு என்று அல்லாஹுடைய கிதாபில் எழுதப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் சங்கையானவை. இதுவே நிலையான மார்க்கம். இவற்றில் நீங்கள் உங்களுக்கு அநீதி இழைத்துக் கொள்ளாதீர்கள். 9-36.

மாதங்களில் நான்கு மாதங்கள் சிறப்பானவை. அவை எவை என்று நபி (ஸல்) அவர்கள் "ஹஜ்ஜதுல் வதாவில்" இறுதி ஹஜ்ஜில் தெளிவுபடுத்தினார்கள்.

உங்களுக்கிடையே சுழன்று வரும் காலங்களில் நான்கு மாதங்கள் கண்ணியமானவை. 1. ரஜப், 2. முஹர்ரம், 3.துல்கஃதா, 4.துல்ஹஜ் ஆகிய மாதங்களாகும்.

கண்ணியமிக்க நான்கு மாதங்களில் ரஜப் மாதமும் ஒன்று. நான்கு மாதங்களிலும் ரஜப் மாதத்தின் சிறப்பு தனிச் சிறப்புதான். ஏனெனில் நபி (ஸல்) அவர்களின் புனித மிக்க மிஃராஜ் பயணம் இம்மாதம் இருபத்தி ஏழாம் நாளிலேயே நடந்துள்ளது.

இம்மாதம் அரேபியர்களிடம் இஸ்லாத்திற்கு முன்பு அறியாமைக் காலத்திலும் சிறப்புடைய மாதமாகவே இருந்தது. இம்மாதத்தில் அவர்கள் போர் செய்ய மாட்டார்கள். புதிதாக எந்தப் போரையும் தொடங்கவும் மாட்டார்கள்.



இம்மாதத்திற்கு முன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் எந்தப் போரையும் இம்மாதத்தில் தொடரவும் மாட்டார்கள். பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு பாதிப்பை ஏற்படுத்தியவரை சபிப்பதற்கு, இம்மாதத்தையே தேர்வு செய்து இம்மாதத்தில் தான் சபிப்பார்கள். நேர்ச்சைக்கான குர்பானியையும் கூட மற்ற மாதங்களில் கொடுத்திடாது, இம்மாதத்தில் தான் கொடுப்பார்கள். வழக்கில் இருந்து வந்த இப்பழக்கங்களை-யெல்லாம் நபி (ஸல்) அவர்கள் மாற்றியமைத்து முறைப்படுத்தி கொடுத்தார்கள்.

ரஜப் மாதமின்றி எம்மாதத்திலும் யாரும் போரைத் தாமாகத் துவங்கக் கூடாது. யாரும் வம்புக்கு வந்தால் நிர்பந்தத்தின் போது மட்டும் எதிரிகளை எதிர்த்து போர் செய்ய அனுமதி உண்டு. அஃதன்றி அநீதப் போருக்கு இஸ்லாத்தில் இடமில்லை. குர்பானி கொடுப்பதும், நேர்ச்சையை நிறைவேற்றுவதும் அல்லாஹுக்காக செய்யப்படுபவையாகும். அவற்றைக் காலந்தாழ்த்த வேண்டிய அவசியம் இல்லை. குர்பானியையும், நேர்ச்சையையும் ரஜப் மாதமின்றி எம்மாதத்திலும் தாராளமாக நிறைவேற்றலாம். காலம் தாமதிக்காது விரைவாக நிறைவேற்றுவது நல்லது. ஏனெனில் நாம் செய்யும் தாமதம் சில பொழுது அக்காரியங்களைச் செய்ய விடாமல் கூட ஆக்கி விடலாம்.

இவ்வாறு ரஜப் மாதத்தின் செயல்பாடுகளை நெறிப்படுத்தி தந்த நபி (ஸல்) அவர்கள் அம்மாதத்தில் ஓத வேண்டிய ஓர் துஆவையும் கற்றுத் தந்தார்கள்.

யாஅல்லாஹ்! ரஜப் மாதத்திலும், ஷஃபான் மாதத்திலும் எங்களுக்கு நீ பரகத் செய்வாயாக! ரமலான் மாதத்தை எங்களை நீ அடையச் செய்வாயாக! நமக்கு கற்றுத் தரப்பட்ட இந்த துஆவை நாம் இம்மாதம் முழுமையும் செய்து வருகிறோம். அதனால் அல்லாஹ்வின் பரகத் நமக்குக் கிடைக்கப்பெறுகிறது.

நபி (ஸல்) அவர்களும் இம்மாதத்தில் பரகத் வேண்டி துஆ செய்ததனால் நபியின் துஆவின் பரகத், நிச்சயம் இம்மாதத்தை பரகத்தாக ஆக்கி வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் பரகத்தாக திகழ்ந்தார்கள். அவர்களோடு தொடர்பு கொள்ளும் ஒவ்வொன்றும் பரகத் பெற்றிருப்பதை ஹதீஸ்களில் நாம் காணலாம். நபியின் பரகத்தான பெயரை, "முஹம்மத், (புகழுக்குரியவர்) எனும் திருநாமத்தை யார் சூட்டப் பெறுகிறாரோ அவர் பரகத் பெற்றவராக ஆகி விடுகிறார்.

என் பெயரைக் கொண்டு யார் பெயரிடுகிறாரோ அது அவருக்கு உலகில் பரகத்தாகவும், நாளை கியாமத்தில் அவருக்கு அது ராஹத்தாகவும் ஆகி விடுகிறது என்றார்கள்.

அல்லாஹ் தன் பெயருக்கு எவ்வாறு பரகத் வழங்குகின்றானோ அவ்வாறு தன் நபியின் பெயருக்கும் பரகத் வழங்குகின்றான் என்பதிலிருந்தே நபியின் பரகத்தை புரிந்து கொள்ள முடியும்.

நபியின் பரகத்தைப் பெற்றவர்கள் அனேகம் பேர் உண்டு. அவர்களில் ஒரு சிலரை மட்டும் நினைவுக்கு கொண்டு வருகின்றேன்.



அல்லாஹ்வின் போர் வாள் என்றழைக்கப்பட்ட காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் படைத் தளபதியாக பொறுப்பேற்றுச் சென்ற அனைத்து போர்க்களங்களிலும், வெற்றி வாகை சூடியே வந்தார்கள். தோல்வி என்பதையே அவர்களிடம் பார்த்ததில்லை. இதைப் பார்த்த சஹாபிகளுக்கு பேராச்சரியமே ஏற்பட்டது. எனினும் அதற்கானக் காரணத்தை ஸஹாபிகளால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இவ்வாறிருந்த போது, ஒரு நாள் போர்க்களம் ஒன்றில் முனைப்பாக நடைபெறும் போர், உச்சக்கட்டத்தை எட்டிய நேரத்தில், எல்லோரும் சரமாரியாக மோதிக் கொண்டும், வெட்டிக் கொண்டும், போரிட்டுக் கொண்டிருக்கும் வேளையில், ஹழ்ரத் காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களோ, தம் தலையிலிருந்து விழுந்த தம் தலைப்பாகையை தேடிக் கொண்டிருந்தார்கள். இறுதியாக அதனைத் தேடி எடுத்து அணிந்து கொண்டு மீண்டும் போரிட்டார்கள்.

இதைக் கவனித்த சில ஸஹாபிகள் போர் முடிவுற்ற பின், காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களிடம் சென்று இதற்கான காரணத்தைக் கேட்டார்கள். அந்த நேரத்தில் நீங்கள் எதனைத் தேடிக் கொண்டிருந்தீர்கள். போரை விட உங்களுக்குத் தலைப்பாகை முக்கியமா? தலைபோகும் நேரத்தில் நீங்கள் தலைப்பாகையைத் தேடிக் கொண்டிருந்தது முறையா? இது தான் ஒரு போர்ப் படைத் தளபதி நடந்து கொள்ளும் விதமா! எனும் தொனியில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் அதற்கானக் காரணத்தைக் கூறினார்கள். நான் தலைப்பாகையைத் தேடிக் கொண்டிருக்கவில்லை.

தலைப்பாகைக்குள் வைத்திருந்த நபியின் முபாரக்கான முடியைத் தான் தேடினேன். என் தலைப்பாகைக்குள் நபி (ஸல்) அவர்களின் முடி ஒன்றை வைத்திருந்தேன். நான் போர்க்களங்களுக்கு வரும் போதெல்லாம் என் தலைப்பாகைக்குள் நபியின் முடியை வைத்துக் கொண்டு வருவேன். அதன் காரணமாகவே நான் அனைத்துப் போர்க்களங்களிலும் வெற்றி பெறுகிறேன் என்று சொன்னதும் ஸஹாபிகளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. நபியின் பரகத்தை உணர்ந்து ஸஹாபிகள் சந்தோஷப்பட்டார்கள். நபியின் முடியின் பரகத், காலித் இப்னு வலீத் (ரலி) அவர்கள் மட்டுமின்றி முஸ்லிம்கள் அனைவருக்கும் கிடைக்கப் பெற்றதால் போர்க்களமே வெற்றியாக அமைந்தது.

ஹழ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் நபியே! தங்கள் செருப்பை எனக்குத் தாருங்கள் என்று கேட்டார்கள். நபியின் செருப்பை முன்பே ஹழ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டிருந்தார்கள் அதனை அபூஹுரைரா (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அபூஹுரைராவே! உமக்கு முன்பே ஆயிஷா என் செருப்பை கேட்டு விட்டார்களே. எனினும் உங்களுக்கும் தருகின்றேன் என்று கூறி ஒரு கால் செருப்பை அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுக்குக் கொடுத்த நபி (ஸல்) அவர்கள் மறுகால் செருப்பை ஹழ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

இதன் மூலம் ஏற்பட்ட பெரும் ரஹ்மத்தை இன்று உலகமே அனுபவித்துக் கொண்டிருக்கிறது. ஸஹாபிகளிலேயே அதிகமான ஹதீஸ்களை அறிவித்தது இவர்கள் இருவர் தாம்.



ஹழ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஐயாயிரம் ஹதீஸ்களுக்கு அதிகமாகவும், அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் இரண்டாயிரத்திற்கும் அதிகமான ஹதீஸ்களையும் அறிவித்துள்ளனர். இது நபி (ஸல்) அவர்களின் பரகத்தேயாகும்.

நபி (ஸல்) அவர்களுக்கு பத்து வருட காலம் பணி விடை செய்த ஹழ்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் பரகத் வேண்டி துஆ செய்தார்கள். அந்த துஆவின் பலனாக அதிகமாகவே அனஸ் (ரலி) அவர்கள் பரகத்தை பெற்றிருந்ததை அவர்களின் வரலாற்றில் நாம் பார்க்கிறோம். அதிகமான காலங்கள் அவர்கள் உயிர் வாழ்ந்தார்கள். ஸஹாபிகளிலேயே இறுதியாக மரணித்தவர்கள் அவர்கள் தான். அதிகமான குழந்தைகள், பேரக்குழந்தைகள் அவர்களுக்கு இருந்தார்கள்.

விவசாயம் செய்யும் ஸஹாபிகளில் அனைவருக்கும் அறுவடை ஒரு முறை என்றால் இவர்களுக்கோ இரு முறை. அதிகமாகவே பழங்களும் இருக்கும். இவற்றிற்கெல்லாம் மேலாக அவர்கள் தோட்டத்தில் விளையும் பழங்களில் மட்டும் ஜம்ஜா செடியில் உயர்தர கஸ்தூரி மணம் கமழும். இவை அனைத்தும் நபியின் பரகத்தின் வெளிப்பாடு.

நபியவர்களே பரகத்தை கேட்ட ரஜப் மாதத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நோன்புகள் நோற்பதுடன் அதிகமாக இபாதத்களும் செய்ய வேண்டும். மிகுதமாகவே பாவ மன்னிப்புக் கேட்க வேண்டும். துஆவில் பரகத்தை கேட்பதற்கு மறந்து விடக் கூடாது. எல்லாம் வல்ல அல்லாஹ் நம் இபாதத்களையும், துஆக்களையும் ஏற்று, நமக்கு நம் வாழ்வில் பரகத்தும், ரஹ்மத்தும் செய்வானாக!.

# ஆன்மீக விண்வெளிப் பயணம் :

உலகில் பயணங்கள் பலவகை : அவை அனைத்தையும் விட்டு முற்றிலும் மாறுபட்ட பயணம் தான் மிஃராஜ் எனும் பயணம். மிஃராஜ் என்பது இரு வகை பயணங்களைக் கொண்டது.

1. இஸ்ரா - தரை வழிப்பயணம்

2. மிஃராஜ் - விண்வெளிப்பயணம்.

இஸ்ரா எனும் தரைவழிப் பயணம் குறித்து குர்ஆன் பேசுகிறது. மிஃராஜ் எனும் விண்வெளிப் பயணம் பற்றி ஹதீஸ் எடுத்துரைக்கிறது. நபியின் தரைப் பயணத்தை ஏற்கும் பலர் நபியின் விண்வெளிப் பயணத்தை ஏற்கத் தயாரில்லை. அதனை அவர்கள் அறிவைக் கொண்டே சிந்தித்தது தான் காரணம்.

உலகில் வழி கெட்டவர்கள் பெரும்பாலும் அறிவைக் கொண்டே வழி கெட்டார்கள். மிஃராஜை நம்புவதற்கு அறிவு தேவையில்லை. ஈமான் தான் தேவை. இறைநம்பிக்கையும், ஆன்மீக உணர்வும் தேவை. அன்றிலிருந்து இன்று வரை மிஃராஜ் என்பது முஸ்லிமையும், காஃபிரையும், முஃமினையும் முனாஃப்பிக்கையும் பிரித்துக் காட்டும் ஓர் சாதனமாகத் திகழ்கிறது. ஸஹாபிகள் எனும் போர்வையில் ஒளிந்து கொண்டிருந்த முனாஃபிக்குகளை, மிஃராஜ் வெளிப்படுத்திக் காட்டியது.

தூரம் ஒரு பொருட்டல்ல, மிஃராஜ் என்பது சாத்தியம் என்பதை குர்ஆன், ஹதீஸின் பல்வேறு நிகழ்வுகள் உறுதி செய்கின்றன.

அல்லாஹ்வின் அர்ஷின் அருகில் வஹியை பெற்றுக் கொள்ளும் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மறுநிமிடம் நபி மார்களின் அருகாமையில் இருந்த நிகழ்வுகள்.



ஒரு முறை ஜிப்ரீல் (அலை) அவர்களிடம், நீங்கள் உலகிற்கு அதி விரைவாக வந்துள்ள தருணங்கள் எவையேனும் உள்ளனவா? என நபி (ஸல்) அவர்கள் வினவிய போது, நான்கு முறைகள் அவ்வாறு வந்துள்ளதாக பதிலளித்த ஜிப்ரில் (அலை) அவர்கள், அதனை விரிவுபட எடுத்துரைத்தார்கள்.

யூசுஃப் (அலை) அவர்களை, அவரின் சகோதரர்கள் கிணற்றினுள் போட்டு விட்ட போது, அவர்களை காப்பாற்றுவதற்காகவும், இப்றாஹிம் (அலை) அவர்களை நம்ரூத் நெருப்புக்குண்டத்தினுள் தூக்கி எறிந்த போது அவர்களை என் இறக்கைகளைக் கொண்டு காப்பாற்றுவதற்காகவும், இஸ்மாயீல் (அலை) அவர்களை தந்தை இப்றாஹீம் (அலை) அவர்கள் கழுத்தில் கத்தியை வைத்து குர்பானி கொடுக்க முனைந்த போது அக்கத்தியை மழுங்கச் செய்வதற்காகவும், தாயிஃப் பெரு வெளியில் தாங்கள் இரத்தம் சிந்திய போது, அதனைப் பூமியில் விழுவதற்கு முன் பிடித்துக் கொள்வதற்காகவும், நான் மிக விரைவாகவே வந்தேன் என்று ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறினார்கள்.

இதனைப் போன்றே ஷைத்தான்களைக் குறித்து வரும் ஹதீஸ்கள். கடலின் மையப் பகுதியில் சிம்மாசனத்தை அமைத்துக் கொண்டு குடியிருக்கும் ஷைத்தான்கள் உலகம் முழுமையும் உள்ள மக்களையெல்லாம் வழி கெடுக்கிறார்கள்.

ஹழ்ரத் சுலைமான் (அலை) அவர்கள் பல மாதங்கள் பயணிக்கும் தொலை தூரப் பயணத்தை, ஒரே நாளில் பயணித்ததைக் குர்ஆன் கூறுகிறது.

சுலைமான் (அலை) அவர்களுக்கு நாம் காற்றை வசப்படுத்திக் கொடுத்தோம். அதன் "காலைப் பயணம் ஒரு மாத தொலைவு, அதன் மாலைப் பயணம் ஒரு மாத தொலைவு" (34-12).

ஹழ்ரத் சுலைமான் (அலை) அவர்கள் அவையில் இருந்த ஒரு மனிதர் "ஆஸிஃப் இப்னு பர்கிய்யா" என்பவர் கண் மூடி கண் திறப்பதற்குள், எகிப்திலுள்ள இளவரசி பல்கீஸின் அரியணையை சுலைமான் நபியிடம் கொண்டு வந்து சேர்த்ததையும் குர்ஆன் கூறுகிறது.

பைத்துல் முகத்தஸை ஆண்டு வந்த மன்னர், ஒரு முறை கைதிகளாகப் பிடிப்பட்ட அரேபியர்களிடம் நபியைக் குறித்து பல கேள்விகள் கேட்ட போது, அவை அனைத்திற்கும் பதிலளித்த அரேபியர்களின் தலைவர் அபூ சுஃப்யான் இறுதியாக, நபியின் மிஃராஜ் பற்றிக் கூறி இந்த ஒன்றில் தான் முஹம்மத் பொய்யுரைக்கிறார் என்று கூறியபோது அச்சபையிலிருந்த பைத்துல் முகத்தஸ் காவலாளி, முஹம்மத் சொல்வது உண்மையாகத் தான் இருக்க வேண்டும். தினமும் இரவு பைத்துல் முகத்தஸின் கதவுகளையெல்லாம் மூடிவிட்டு இல்லம் செல்லும் நான், ஒரு இரவு கதவுகளை மூடிக் கொண்டு வந்த போது, ஒரே ஒரு கதவை மட்டும் என்னால் மூடிவிட முடியவில்லை. பலரை துணைக்கு அழைத்தும் முயற்சித்துப் பார்த்தேன், முடிந்ததில்லை. அன்று அக்கதவு மட்டும் திறந்தே இருந்தது. மறுநாள் காலையிலோ வழக்கம் போலவே அக்கதவை என்னால் மூடிவிட முடிந்தது. அன்று இரவு யாரோ இங்கு வந்து சென்றிருக்கிறார்கள் என்பதையும் என்னால் உணர முடிந்தது. எனவே அதனை நான் நம்புகிறேன். சாட்சியமும் கூறுகிறேன் என்றார்.

நாம் கூறிய நிகழ்வுகள் அனைத்தினையும் தெளிவான சிந்தனையோடும், முறையான ஈமானுடனும் நிதானமாக சிந்திக்கும் எவரும் இஸ்ராவையோ அல்லது மிஃராஜையோ ஒரு போதும் மறுத்திட இயலாது.

மிஃராஜில் நடந்த சில முக்கியச் செய்திகளை நாம் தெரிந்தாக வேண்டும். கஃபாவிலிருந்து பைத்துல் முகத்தஸ்



செல்லும் வழியில் நபி (ஸல்) அவர்கள் பல்வேறு காட்சிகளைக் கண்டார்கள். ஒரு இடம் அவ்விடத்தில் ஜிப்ரீல் (அலை) அவர்கள், நபி (ஸல்) அவர்களை இரு ரக்அத் தொழுமாறு கூறி, மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் பேசிய இடம் இதுதான் என்றும் கூறினார்கள்.

பெத்லஹேம் என்று இன்று கூறப்படுகின்ற இடத்தில் இரு ரக்அத் தொழும் படி கூறி, இது ஈஸா (அலை) பிறந்த இடம் என்றார்கள். அதன் பின் ஒரு இடத்தில் அருமையான வாசனை. அவ்விடம் ஃபிர்அவ்னின் பணிப்பெண் மாஷிதா ஷஹீதான இடம். தொடர்ந்து பல இடங்கள்; பல காட்சிகள். இவை அனைத்தையும் நபியவர்கள் கூறும் விதமே அற்புதந்தான்.

உலகில் எவருக்கும் நடந்திடாத மிகப் பெரும் அற்புதமாக மிஃராஜ் மற்றும் இஸ்ரா நிகழ்வுகளைக் கண்டு எந்த ஒரு மனிதனும், நபியை கடவுள் அந்தஸ்துக்கு கொண்டு சென்று விடக் கூடாது என்பதற்காகவே அல்லாஹ் இந்நிகழ்வைப்பற்றிப் பேசுகையில் நபியை அடிமை என்றே குறிப்பிடுகின்றான்.

**தன் அடியாரை இரவின் ஒரு பகுதியில் மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு அழைத்துச் சென்ற (அல்லாஹ்வாகிய) அவன் பரிசுத்தமானவன் (17-1).**

மிஃராஜை ஒரு மனிதன் மறுத்தால் அவன் பாவியாவான் ஆனால் இஸ்ராவை மறுத்தாலோ காஃபிராகவே ஆகி விடுவான். ஏனெனில் இஸ்ராவைப் பற்றி குர்ஆனே கூறி விட்டது.

இஸ்ரா, மிஃராஜ் விஷயத்தில் நம்முடைய ஈமான் ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடைய ஈமானைப் போன்றிருக்க வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் பலமான ஈமானை நம் அனைவருக்கும் தந்தருள்வானாக!.

## பராஅத் இரவு :

அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட படைப்புக்களில் இரும்புக்கு தனி வலிமை இருக்கிறது. அது அதன் வலிமையைக் கொண்டு செயல்படும். ஆனால் அந்த இரும்பு ஹழ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களை, ஹழ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்கள் அறுக்கும் போது அக்கத்தி அறுக்காமல் போனது ஏன்? அது போல் நெருப்பு சுடும் தன்மை கொண்டது. ஆனால் ஹழ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்களை நெருப்பில் தூக்கி போடப்பட்ட போது அந்நெருப்பு பொசுக்காமல் போனது ஏன்?

வானவத் தூதர் ஜிப்ரீல் வளர்த்த மூஸா (சாமிரி) இறைவிரோதியாகவும், இறை விரோதி ஃபிர்அவ்ன் வளர்த்த மூஸா (நபி) இறைத்தூதராகவும் ஆனது எப்படி?

பாவம் செய்யும் மனிதர்கள் பலர் சொகுசு வாழ்க்கை வாழும் போது, இறை வணக்கம் செய்யும் சிலர் வறுமையில் வாடுவது எதனால்? எல்லாமே இறைவனின் களா கத்ரினால். இறைவன் விதித்த விதியின் பிரகாரமே அனைத்தும் நடைபெறுகிறது.

களா கத்ர் எனும் விதி முடிவு செய்யப்படும் இரவு பராஅத் இரவு ஆகும். உணவு, உடை, உடல் ஆரோக்கியம், வியாபாரம், திருமணம், குழந்தை பாக்யம், ஹஜ் செய்வது, மரணமாகுவது போன்ற அனைத்து காரியங்களும் பராஅத் இரவில் தான் முடிவு செய்யப்படுகின்றது.

களா-கத்ர் முடிவு செய்யப்படும் பராஅத் இரவை முன்னிட்டு நாம் செய்ய வேண்டியவற்றை நபியவர்கள் நமக்கு விளக்கித் தருகிறார்கள்.



"ஷஃபான் மாதத்தின் பாதி இரவு (பதினைந்தாம் இரவு) வந்தால் அவ்விரவில் நின்று தொழுவுங்கள். அதன் பகலில் நோன்பு நோறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் அன்று சூரியன் மறையும் வேளை துன்யாவின் வானத்திற்கு இறங்குகிறான். மன்னிப்புத் தேடுபவர் இருக்கிறாரா? அவருக்கு நான் மன்னிப்பு வழங்குகின்றேன். ரிஜ்க் தேடுபவர் இருக்கிறாரா? அவருக்கு நான் ரிஜ்க் வழங்குகிறேன். சோதிக்கப்பட்டவர் இருக்கிறாரா? அவருக்கு நான் சுகம் வழங்குகிறேன் என கூறுகிறான். இவ்வாறு சூரியன் உதயமாகும் வரை கூறிக் கொண்டே இருக்கிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்".

விதி நிர்ணயிக்கப்படும் இவ்விரவில் மூன்று முக்கிய விஷயங்களை கேட்க வேண்டும் என்று நமக்கு இமாம்களால் வழி காட்டப்பட்டிருக்கின்றது.

1. வறுமையில்லாத செழிப்பான வாழ்வு
2. நோயில்லாத ஆரோக்ய வாழ்வு
3. குறைவில்லாத நீண்ட ஆயுள்

சூரா யாஸீன் ஓதி இம்மூன்று துஆக்களையும் கேட்பது சிறந்தது.

யார் யாஸீன் சூராவை ஓதுகிறாரோ அவருக்கு பத்து முறை குர்ஆன் ஓதிய நன்மைகளை அல்லாஹ் எழுதுகிறான் என யாஸீன் சூரா குறித்து ஹதீஸ் கூறும் சிறப்பை கவனத்தில் கொள்ள வேண்டும்.

## நில்! கவனி! செல்!

மனிதர்கள் வெற்றி பெறுவது, அவர்களிடம் இயற்கையாக அமையப் பெற்ற தீய குணங்களை மாற்றி, நற்குணங்களில் நடை பயிலும் போது தான் ஏற்படுகிறது என்பது உலகமறிந்த உண்மை.

மனித குணங்களுடன் இரண்டறக் கலந்து விட்ட, இயற்கையாக அமையப் பெற்ற தீய குணங்களில் ஒன்று "அவசரம்".

**மனிதன் அவசரக்காரனாகப் படைக்கப்பட்டுள்ளான் (21-37)** எனத் திருமறை பறைசாற்றுகிறது.

முதல் மனிதர் - மனித குலத் தந்தை ஆதம் (அலை) அவர்களை, இறைவன் படைக்கத் துவங்கும் போது அவர்களின் தோற்றத்தை உருவாக்கி, அதில் ரூஹ் ஊத, ரூஹ் உடல் முழுமையும் செல்லும் முன்பே நபி ஆதம் (அலை) அவர்கள் எழுந்திருப்பதற்கு முயற்சி செய்தார்கள் என்பதை உணரும்போது மேற்கண்ட இறை வசனத்தின் உண்மையை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

நபி மூஸா (அலை) அவர்கள் தவ்ராத் வேதத்தைப் பெறுவதற்குத் தம் சமூகத்துடன் வர வேண்டும் என்று இறைவனின் ஆணை. ஆனால், படைத்த நாயனின் சமூகத்திற்குச் செல்கின்றோம் என்ற உணர்வினால் உந்தப்பட்டு, அவசரமாக - தான் மட்டுமே தனித்துச் சென்று விட்டார்கள். அதற்குப் பின் நடந்தவற்றை அல்லாஹ் இப்படிக் குறிப்பிடுகின்றான். அப்போது இறைவன் "மூஸாவே! உன் சமூகத்தாரை விட்டு (நீர் மட்டும் வருவதற்கு) உம்மை



அவசரப்படுத்தியது ஏன்?" (என கேட்டான்) (அதற்கு) மூஸா அவர்கள் என் அடிச்சுவட்டின் மீது (வந்து கொண்டிருக்கின்றனர்)

**என் இறைவா! "நீ என்னைப் பொருந்திக் கொள்ளும் பொருட்டு நான் உன்னிடம் விரைந்து வந்தேன்" என்று கூறினார். (அப்போது) "நிச்சயமாக நீர் வந்ததற்குப்பின் உம் கூட்டத்தாரைத் திட்டமாக நாம் சோதனைக்குள்ளாக்கினோம். ஸாமிரீ என்பவன் அவர்களை வழி கெடுத்து விட்டான்" என்று அல்லாஹ் கூறினான். (20 -83, 84, 85)**

அல்லாஹ்வின் பொருத்தம் பெறுவதற்கு, மேற்கண்ட அவசரமும் கூட விபரீதத்தில் முடிந்திருக்கிறது எனும் போது நாம் எந்தச் செயலிலும் நிதானித்துப் பலரிடம் ஆலோசித்துக் கவனமாகச் செய்ய வேண்டும் என்பதைத் தான் உறுதி கொள்ள முடிகிறது.

நில்! கவனி! செல்! இந்த வரி, வாகனத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல. வாழ்க்கைக்கும் தான். இன்று சிறு விஷயங்கள் முதல், பெரும் காரியங்கள் வரை ஏற்படுகின்ற குழப்பங்களுக்கு மிக முக்கிய காரணமாக அமைவது நிதானம் தவறுவதுதான். உலக விஷயங்களில் நிதானம் தவறுபவர்கள் அதன் பலனை உலகிலேயே பெற்று விடுகிறார்கள். மார்க்க விஷயங்களில் அவசரப்படுபவர்கள் அது குறித்த நபியின் எச்சரிக்கையை மறந்துவிடக் கூடாது.

தொழுகையில் திருடுபவனே மிகப் பெரும் திருடன் என நபி (ஸல்) அவர்கள் கூறிய போது, தொழுகையில் எவ்வாறு திருட முடியும்? என ஸஹாபாக்கள் விளக்கம் கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், அதன் ருகூவு, ஸுஜூதைப்

பரிபூரணமாகச் செய்யாமல், அவசரமாகச் செய்வது எனப் பதில் கூறினார்கள்.

"தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட்டு விட்டால் நீங்கள் வேகமாக வர வேண்டாம். நிதானமாக வந்து இமாமுடன் கிடைத்த ரக்அத்தைத் தொழுது கொள்ளுங்கள். தவறியதை எழுந்து பூர்த்தி செய்யுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"ருகூவில் இமாம் தலை உயர்த்துவதற்கு முன் யார் தன் தலையை (அவசரப்பட்டு) உயர்த்துவாரோ, அல்லாஹ் அவரின் தலையை கழுதைத் தலையாக மாற்றி விடுவான்." (நபி மொழி).

இறைவனுக்காகவே செய்யப்படுகின்ற வணக்க வழிபாடுகளிலும் கூட, அவசரம் கூடாது என எச்சரிக்கை செய்யும் நபி மொழிகள்தான், மேலே தரப்பட்டவைகள்.

ஒரு தடவை ஜனாதிபதி ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களை சந்திக்க ஒருவர் வருகிறார். அப்போது உமர் (ரலி) அவர்களின் மனைவி, ஜனாதிபதியிடம் குரல் உயர்த்தி, கடுமையாக பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சியைக் கண்ட அந்த மனிதர் திரும்பிச் சென்று விடுகிறார். உடனே உமர் (ரலி) அவர்கள், அந்த மனிதரை அழைத்து "தாங்கள் வந்த நோக்கம் என்ன? ஏன் திரும்பிச் செல்கின்றீர்?" என கேட்க, அதற்கு அவர், "ஜனாதிபதி அவர்களே, என் மனைவி என்னிடம் கடுமையாக நடந்து கொள்கிறார். சின்ன சின்ன விஷயங்களில் கூட என்னை புரிந்து கொள்ளாமல் கடும் சொல் கொண்டு என்னைக் கஷ்டப்படுத்துகின்றாள். அது குறித்துப் புகார் செய்யத் தங்களிடம் வந்தேன். ஆனால், இங்கும் அதே நிலைதான் என்பதைப் பார்த்ததும் திரும்பி விட்டேன்" என்று கூறினார். அப்போது ஹழ்ரத் உமர் (ரலி) அவர்கள், "தோழரே!



அவசரப்படாதீர். நான் ஏன் என் மனைவி என்னைக் கடும் சொல் கொண்டு பேசும்போது பொறுமையாக இருக்கிறேன் தெரியுமா? நான் பசித்த போது எனக்காக உணவு சமைத்துத் தருகிறாள். என் ஆடைகளை துவைத்துத் தருகிறாள். என் பிள்ளைக்காக தன் இரத்தத்தையே பாலாகக் கொடுக்கிறாள். இவை அனைத்திற்கும் மேலாக நான் ஹராமான செயலில் ஈடுபடுவதை விட்டும் என்னைத் தடுத்து எனக்கு நிம்மதி தருகிறாள். எனக்காக அவள் இத்தனைத் தியாகங்கள் செய்யும்போது அவளுக்காக நான் ஏன் சில விஷயங்களில் பொறுமையாக இருக்கக் கூடாது? எனக் கூறினார்கள்.

இன்று குடும்ப வாழ்க்கையில் நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கானத் தீர்வை மிக அற்புதமாகச் சொல்லித்தருகிறார்கள். எல்லாக் காலங்களிலும், காரியங்களிலும் நிதானத்தை வலியுறுத்தும் மார்க்கம் சில விஷயங்களில் அவசரம் காட்டச் சொல்கிறது.

**தொழுகையை நிறைவேற்றுதல்,**

**கன்னிப் பெண்ணிற்கு மணமுடித்து வைத்தல்,**

**மைய்யித்தை அடக்கம் செய்தல்,**

**விருந்தாளியை உபசரித்தல்,**

**கடனை நிறைவேற்றுதல்,** மற்றும்

**தவ்பா செய்தல்** ஆகிய காரியங்களில் தாமதமின்றி உடனே செய்ய வேண்டும்.

சற்று நில்லுங்கள்! சொல்லப்பட்ட கருத்தை மனதில் நிலை நிறுத்திக் கவனியுங்கள்! அதன்படி அமல் செய்ய வீறு நடைபோட்டுச் செல்லுங்கள்.

## இஸ்லாமிய ஆட்சி :

உலகில் ஒரு நாடு அல்லது ஒரு மாநிலம், சிறப்பாகவும் செழுமையாகவும் திகழ்ந்து, முன்னேற்றப் பாதையை நோக்கி வீறு நடை போட வேண்டுமென்று அந்தந்த நாட்டவர், மாநிலத்தவர் விரும்புவது எதார்த்தம். ஆனாலும் அம்மக்கள் விரும்பும் கனவு நிறைவுறுகிறதா? என்றால், இல்லை என்று தான் சொல்லனும். விதி விலக்காக சில நாடுகள், சில மாநிலங்கள் இருக்கலாம்.

உலக வரலாற்றில் மக்கள் விரும்பும் ஆட்சியை, புகழும் ஆட்சியை வழங்கியவர்கள், நபி (ஸல்) அவர்கள் தான். அவர்களைத் தொடர்ந்து, அவர்களின் வழி வந்த இஸ்லாமிய கலீஃபாக்கள் ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், ஹழ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹழ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஹழ்ரத் அலீ (ரலி) அவர்கள் போன்றோர், மக்கள் புகழத் தக்க வகையில் சிறப்பான ஆட்சியையே ஆண்டு முடித்தார்கள். ஆட்சியின் போது வாழ்ந்த அன்றைய மக்கள் மட்டுமின்றி, இன்றைய மக்களும், ஏன் உலக மக்கள் யாவரும், என்றும் புகழத்தக்க வகையில் இஸ்லாமிய ஆட்சிகள் இருந்தன என்று சொன்னால் அது மிகையான ஒன்றல்ல.

இந்தியாவின் தேசப்பிதா என்று சொல்லப்படும் காந்தியடிகள் கூட, ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களின் சரித்திரத்தை, அவர்கள் செய்த ஆட்சியைப் படித்து விட்டு ஹழ்ரத் உமர் அவர்களை உளமாரப் புகழ்ந்து விட்டு, அந்த



உமரின் ஆட்சி இந்தியாவுக்கு வேண்டும் என்று கூறினார்கள். இந்தியாவில் உமரின் ஆட்சி போன்று ஒரு ஆட்சி நடைபெறுமானால், இந்தியா தான் உலகிலேயே முதன்மை நாடு எனும் கருத்து, காந்தியடிகளிடம் அவர்களையும் மிஞ்சி வெளிப்படுகிறதெனில் அதற்கு இஸ்லாமிய ஆட்சி முறையின் உயர்நிலையும், சீர்நிலையும் தான் காரணம்.

ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சியின் போது நடைபெற்ற யுத்தங்களில் யர்முக் யுத்தமும் ஒன்று. அந்த யுத்தத்திற்கு ஹழ்ரத் அபூ உபைத்திப்னுல் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் படைத்தளபதியாக நியமிக்கப்பட்டு, படை எதிரிகளை நோக்கி சென்ற போது, எதிரிகள் தங்களைவிட அதிக தொகையினராக இருப்பதைக் கண்டு முஸ்லிம் படையினருக்கு அச்சமும், பீதியும் ஏற்பட்டது. இது குறித்து ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிய படைத்தளபதி வெற்றிக்கு துஆ செய்யுமாறு எழுதினார்கள். பதில் கடிதம் எழுதிய ஜனாதிபதி உமர் (ரலி) அவர்கள் உங்கள் படையிலேயே துஆ ஏற்கப்படத்தக்க ஒருவர் ஸயீதுப்னு ஆமிர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் துஆ செய்யுமாறு கூறுங்கள். ஏனெனில் கைபர் போர்க் களத்திற்குப்பின் இஸ்லாத்திற்கு வந்தவர்களிலேயே இவர் தான் மிகவும் பத்தினித் தனமானவர் என்று குறிப்பிட்டார்கள்.

ஹிம்ஸ் மாகாணத்திற்கு கவர்னராக ஹழ்ரத் உமர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டிருந்தவர் தான் ஹழ்ரத் ஸயீத் அவர்கள். ஹிம்ஸின் கவர்னராக ஸயீத் அவர்கள் பொறுப்பில் இருக்கும் போது, ஜனாதிபதி உமர் (ரலி)

அவர்களிடமிருந்து ஹிம்ஸிற்கு, ஹிம்ஸிலுள்ள ஏழைகளில் மிகவும் ஏழ்மையானவர்களின் பட்டியல் ஒன்றைத் தயார் செய்து தமக்கு அனுப்புமாறு தபால் ஒன்று வந்தது. அதிகாரிகள் கணக்கெடுப்பு செய்து பட்டியல் தயாரித்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர். பட்டியலைப் பார்வையிட்ட ஜனாதிபதியின் கண்களில் கண்ணீர் தாரத் தாரையாக வழிந்தோடத் துவங்கியது. காரணம் ஏழைகளின் பெயர் பட்டியலில் கவர்னர் சயீத் அவர்களின் பெயரும் இடம் பெற்றிருந்தது.

இஸ்லாமிய ஆட்சியாளர்களின் எதார்த்த நிலை இது தான். ஏழ்மை நிலையில் தாம் இருந்து கொண்டு மக்களை செழிப்பான நிலைக்குக் கொண்டு சென்றனர். இன்று நாம் பார்க்கும் ஆட்சியாளர்களில் பெரும்பாலோர் தங்களைச் செல்வந்தவர்களாகவும், நாட்டு மக்களை ஏழைகளாகவும் ஆக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

மிகப் பெரும் பணக்காரர்களின் பட்டியல் ஒன்று இன்று நாம் தயாரிப்போமெனில், அதில் முதலிடம் ஆட்சியாளர்களுக்குரியதாகவே இருக்கும். இன்னும் சொல்லப்போனால் ஆட்சியாளர்களோடு சேர்த்து, அவர்களின் பினாமிகளின் பெயரும் அதிகமாகவே இடம் பெறும்.

கவர்னரின் பெயரைக் கண்டு, கண்ணீர் விட்டு அழுத ஜனாதிபதி அவர்கள், ஆயிரம் பொற்காசுகளை கவர்னருக்கு அனுப்பி வைத்தார்கள். அதைப் பெற்றுக் கொண்ட கவர்னரின் முகத்தில் மகிழ்ச்சியைக் காண்பதற்கு பதிலாக கவர்னரின் கண்களில் கண்ணீரைத்தான் காண முடிந்தது.



"உலகம் என்னைத் தேடி வந்திருக்கிறதே", என்று சொல்லி அழுதார்கள். இதனைத் தமக்கு ஏற்பட்ட பெரும் முஸீபத்தாக எண்ணி, இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் என்று கூறிக் கொண்டார்கள். ஆயிரம் பொற்காசுக்கான தேவை நமக்கு இருக்கிறதா? என மனைவியை கேட்க; மனைவியோ தேவைகளை எடுத்துரைக்க; அக்காசுகளை மனைவியிடம் கொடுத்தார்கள். காசுகளை பெற்றுக் கொண்ட மனைவி, ஒரு பானையில் போட்டு வைத்தார்கள். மறுநாள் சென்று பார்க்கும் போது அக்காசுகளைக் காணவில்லை. கணவரிடம் கேட்ட போது, ஒரு இஸ்லாமியப் போர்ப்படை என்னிடம் உதவி வேண்டி வந்தார்கள். அக்காசுகளை அவர்களுக்கு எடுத்துக் கொடுத்து விட்டேன்.

"உலகம் கிடைக்கப் பெறுவதை விட, ஓர் ஸாலிஹான மனைவி கிடைக்கப் பெறுவது தான் பெரும் பாக்கியம்", என்று நபி (ஸல்) அவர்கள் கூறியது போன்று நான் உலகத்தை விட நல்ல ஸாலிஹான மனைவி கொடுக்கப்பட்டிருக்கின்றேன் என்றார்கள். இது தான் இஸ்லாமிய ஆட்சியாளர்களின் நிலை.

இவ்வாறு தூய்மையான, நேர்மையான ஆட்சியாளர்களாக இன்றைய ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும் என்பது தான் நம்முடைய கனவாகும். அதனை நினைவாக்கி வைக்க அல்லாஹ் போதுமானவன்!

## மனிதனும் மறதியும் :

இயற்கையாகவே சிலர் அபாரமான நினைவாற்றல் பெற்றிருப்பர். மறதி என்பதையே அவர்களின் வாழ்க்கையில் பார்க்க இயலாது. அவர்களின் நினைவாற்றல் நம்மை அதிசயத்திலும், பேராச்சரியத்திலும் கூட ஆழ்த்தும். இவ்விதம் நினைவாற்றல் கொண்டவர்கள் என்று நாம் பார்க்கும் போது, நமக்கு முதலில் நினைவுக்கு வருபவர்கள் இமாம்கள்தான்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன் மொழிகளில் பல்லாயிரக்கணக்கானவை, ஸனதுத் தொடருடன் நினைவிருந்தன. ஹதீஸ் நினைவிலிருப்பதுடன், நபி அவர்கள் கூறக் கேட்டவரின் பெயர், அவரிடமிருந்து கேட்டவரின் பெயர், அவரிடமிருந்து கேட்டவரின் பெயர் என பலப் பெயர்கள் வரிசை மாறாமல் இமாம் அவர்களுக்கு நினைவு இருந்தன. தங்களின் நினைவாற்றலைப் பற்றி இமாம் அவர்களே ஒருமுறை என் நினைவுக் கருவூலத்தில் அகப்பட்டுக் கொண்டவை, ஒரு போதும் என்னிடமிருந்து தப்ப முடியாது என்று கூறினார்கள்.

இமாம்களில் இமாம் முஸ்லிம் (ரஹ்), இமாம் புகாரீ (ரஹ்) போன்றோருக்கு மூன்று நான்கு லட்சம் ஹதீஸ்கள் ஸனதுடன் நினைவிருந்தன என்றால் பலருக்கு நம்ப வியப்பாகத்தான் இருக்கும். ஆனால் உண்மை. நம்பித்தான் ஆக வேண்டும். அத்துணை பெரும் நினைவாற்றலை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியிருந்தான். அவ்விதம் நமக்கும் நல்குவானாக!

இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் தமக்கு நினைவாற்றல் அதிகமாகவே இருந்ததினால் அவர்கள் எதையும் எழுதி



வைத்துக் கொள்ளாதிருந்தார்கள். இதைக் கண்ட சிலர் இவர்களை இழிவாக எண்ணித் தூற்றிய போது அவர்களை நோக்கி, நீங்கள் எழுதி வைத்திருக்கும் அனைத்து ஹதீஸ்களையும் கொண்டு வாருங்கள். அவை அனைத்தையும் நான் உங்களிடம் ஒப்புவிக்கிறேன் என்றார்கள். அவ்விதமே அவர்கள் செய்ய, அவர்கள் கொண்டு வந்த 15 ஆயிரத்திற்கும் அதிகமான ஹதீஸ்களை தங்கு தடையின்றி இமாமவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக கூறியதும், அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு எல்லையே இல்லை.

இமாம் புகாரீ (ரஹ்) அவர்களைப் போன்று அசாதாரண நினைவாற்றல் கொண்டவர்கள் இமாம்களில் அனேகம் பேர் உண்டு. அந்த வகையில் இமாம் அன்வர்ஷா கஷ்மீரி (ரஹ்) அவர்களை இங்கே குறிப்பிடுவது பொருத்தம் என்று கருதுகிறேன்.

ஒரு நாள் எகிப்திலுள்ள அல்அஸ்ஹர் பல்கலைக் கழக, நூல் நிலையத்திற்குள் நுழைந்து அங்குள்ள நூற்களைப் பார்வையிட்டார்கள். அதுவரை அவர்கள் பார்த்திராத புதிய நூல் ஒன்று அவர்களின் கண்களில் பட்டது. படித்தார்கள், படித்தார்கள், படித்துக்கொண்டே இருந்தார்கள். நூலகத்தில் அவர்களைத் தவிர யாருமில்லை. நூலகத்தின் நேரமும் முடிவுக்கு வந்தது. நூலகப் பொறுப்பாளர் மூடுவதற்கு தயார் ஆனார். ஆனாலும் இமாம் அவர்கள் அந்த நூலை விடுவதாக இல்லை. இறுதியாக நூலகரிடம் அந்த நூலை வெளியே எடுத்துச் செல்ல அனுமதி கேட்டார்கள். நூலகரோ முடியாது என்று மறுத்து விட்டார். பின் நூல் முழுவதையும் படித்து முடித்துவிட்டு அங்கிருந்து வெளிப்பட்டு ஊர் திரும்பினார்கள். தான் படித்த அந்த நூலை சில நாட்களில் முழுமையாக எழுதி சரிபார்க்கும்படி அந்நூலகருக்கு அனுப்பி வைத்தார்கள். நூலகரும் மூலப் பிரதியுடன் சரிபார்க்க அசல் நூலுக்கு சிறிய

மாற்றமும் கூட இல்லை. அசல் நூலாகவே கையேட்டுப் பிரதி இருந்ததைப் பார்த்து அசந்தே போனார் நூலகர். ஒரு நூலை ஒரு முறை அதுவும் அவசரத்தில் படித்ததுமே ஒரு எழுத்து விடாமல் மனனம் ஆகிவிட்டது அதிசயமான நினைவாற்றல்தான்.

அசாதாரணமான நினைவாற்றல் குறித்து எழுதிக் கொண்டிருக்கும்போது எனக்கு ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களின் அபாரமான நினைவாற்றல் நினைவுக்கு வருகிறது. அல்லாஹ் ஆலமுல் அர்வாஹில், (ஆன்ம உலகில்) உடலின்றி உயிருடன் மட்டும் மனிதர்கள் இருக்கும் போது அவர்களிடம் உடன்படிக்கை எடுத்தான்.

**நான் உங்கள் இறைவன் இல்லையா? என்று கேட்டான். அதற்கு ஆம் எங்கள் இறைவன்தான் என்று மனிதர்கள் கூறினார்கள். (குர்ஆன் - 7-172).**

உலகில் மனிதர்கள் தோன்று முன் நடந்த இந்நிகழ்வு ஹஜ்ரத் (ரலி) அவர்களுக்கு நினைவிருந்ததாம். எப்போது நடந்தது? அல்லாஹ் எப்படி உடன்படிக்கை எடுத்தான்? அப்போது நான் எங்கே இருந்தேன்? என் அருகில் யார் யாரெல்லாம் நின்றார்கள்? என்பது உட்பட அனைத்தும் தெளிவாக எனக்கு நினைவிருக்கிறது என்று ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்.

நினைவாற்றல் மனிதர்களுக்கு மட்டுமின்றி, மற்ற உயிரினங்களுக்கும் கூட இருக்கத்தான் செய்கிறது. ஈக்களுக்கும், எறும்புகளுக்கும், மீன்களுக்கும் கூட நினைவாற்றல் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது! யானைகளுக்கு நல்ல நினைவாற்றல் உண்டு என்று பலரும் சொல்லக் கேட்டிருப்போம். தேங்காயில் சுண்ணாம்பு தடவிக் கொடுத்தவர்களும், வாழைப்பழத்தில் ஊசியைக் குத்திக்



கொடுத்தவர்களும் பல வருடங்களுக்குப் பிறகும் பழிவாங்கப்பட்டதைச் சொல்லக் கேட்டிருப்போம். இதுவெல்லாம் யானையின் அபார நினைவாற்றல் தான்.

குற்றவாளியைக் கண்டுபிடிக்க நாயைப் பயன்படுத்துவதற்கு நாயின் நினைவாற்றல்தான் காரணம். குற்றம் நடந்த இடத்தில் எந்த வாசனை வருகிறதோ அதை நன்கு அது நினைவு வைத்துக் கொள்ளும். அதை மறந்து விடாமல் அந்த வாடை எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் செல்லும், இறுதியாக திருடனைக் கண்டுபிடித்து விடலாம்.

கிராமங்களில் ஆள் இல்லாமலேயே மாட்டு வண்டிகள் செல்வதைப் பார்த்திருப்போம். குறிப்பிட்ட பாதையில் சரியாக வழி மாறாமல் போய்க் கொண்டிருக்கிறது. மாட்டு வண்டிக்காரன் "ஹாயா" நடந்து வருவான். இதெப்படி? இதற்கும் அதன் நினைவாற்றல் தான் காரணம். குறிப்பிட்ட பாதையில் நடந்து நடந்து மாடுகளின் நினைவில் நன்கு பதிந்து விட்டது. அதனால் அவை முறையாக செல்கின்றன.

ஒரு மாட்டுப் பண்ணைக்கு பலமுறை ஒரு கசாப்புக்காரர் வந்து அறுப்பதற்கு மாடுகளை வாங்கிச் செல்வார். அவரை அங்குள்ள அத்தனை மாடுகளும் நன்கு நினைவு வைத்துக் கொண்டன. அதன் பின் அவர், பண்ணைக்குள் நுழையும் போதெல்லாம் அவை அனைத்தும் ஒன்று சேர்ந்து ஓலமிட ஆரம்பித்தன. மாடுகளுக்கு கூட நல்ல நினைவாற்றல் இருக்கிறபோது மனிதர்களாகிய நமக்கு ஏன் மறதி என்கிறீர்களா?

மறதிக்கான காரணங்கள் பலதாக இருந்தாலும் பிரதானமான காரணங்கள் சிலதேயாகும். அவற்றை சீர் செய்வதின் மூலம் மறதியை நம்மால் நீக்கிக் கொள்ள முடியும்.

**பாவம் :**

மறதிக்கான காரணங்களில் முதலிடம் வகிப்பது பாவம் தான். மனிதர்கள் தாங்கள் செய்யும் பாவத்தினாலேயே அவர்களுக்கு மறதி ஏற்படுகிறது. பாவத்தின் அளவிற்கு அவர்களுக்கு மறதி இருக்கும். பாவம் அதிகமாக இருப்பின் மறதியும் அதிகமாக இருக்கும்.

ஹழ்ரத் இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : எனக்கிருந்த மறதி குறித்து என் ஆசிரியர் ஹழ்ரத் வகீஃ (ரஹ்) அவர்களிடம் நான் முறையிட்ட பொழுது, பாவங்களை விடுமாறும், நினைவாற்றல் என்பது அல்லாஹ்வின் பேரருள். அப்பேரருள் பாவிகளுக்கு கிட்டாது என்றும் கூறினார்கள்.

பின்னர் இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் ஏழு வயதில் திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்ததுடன் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் ஹதீஸ் நூலான முஅத்தாவை 12 வயதில் முழுமையாகவே மனனம் செய்யலானார்கள்.

நாம் நன்மைகளை அதிகமதிகம் செய்யும் பொழுது அவையே நாம் முன்பு செய்த பாவங்களை அழித்து விடுகின்றன.

**"நிச்சயமாக நன்மைகள் பாவங்களை அகற்றி விடுகின்றன". (அல்குர்ஆன் : 11:114)**

இமாம்களின் வியக்கத்தக்க நினைவாற்றலுக்கான காரணம் பாவங்கள் செய்யாததோடு நன்மைகள் அதிகம் செய்ததேயாகும்.



## இஸ்லாமும் தமிழ் முஸ்லிம் அறிஞர்களும் :

இஸ்லாமிய மார்க்கம் தமிழ்நாட்டில் நல்ல நிலையில் வளர்ந்து நிற்பதற்கு தமிழுலக முஸ்லிம்கள் சிலரின் சேவைகளும், தியாகங்களும்தான் காரணம். அவ்வப்போது நினைவூட்டப்பட வேண்டிய தியாகச் செம்மல்கள் பலர் தமிழக வரலாற்றில் உள்ளனர். தம் வாழ்க்கை முழுவதையும் இஸ்லாத்திற்காக, தமிழ் பேசும் மக்களுக்காக அர்ப்பணித்த அந்த நல்ல மனிதர்களை, புனிதர்களை நினைவு கூறுவதும், அவர்களைப் புகழ்வதும் கூட ஒரு விதத்தில் நமக்கு நன்மையையே சேர்ப்பித்து வைக்கும்.

தமிழ் மண்ணில் மார்க்க வளர்ச்சிக்காகவும் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்ட முஸ்லிம் அறிஞர்கள் பலரில் சிலரை இங்கே நினைவு கூர்வோம்.

**குர்ஆனைத் தமிழில் தந்த முதல் அறிஞர்**

**ஆ.கா.அப்துல் ஹமீது பாகவி**

தமிழக அரசியலில் சூறாவளியாய் சுழன்று பணியாற்றிய சிராஜுல் மில்லத் அப்துஸ் ஸமத் சாஹிப் அவர்களின் தந்தையார் ஆ.கா.அப்துல் ஹமீது பாகவி அவர்கள், ஒரு நாள் பரங்கிப்பேட்டையில் நடைபெற்ற அரசியல் கூட்டத்தில் கலந்து கொண்டு ரயில் பயணம் செய்ய எண்ணி, ரயில் நிலையம் வந்து அங்குள்ளோரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது, கவனக்குறைவாக இரும்பு வேலி ஒன்றின் துவாரத்தில் விரலை விட்டு விட்டார்கள். வெளியே இழுத்த போது விரல் வரவில்லை.

ரயிலோ அங்கு வந்து விட்டது. வந்த ரயிலும் புறப்பட்டு விட்டது விரல் வெளியே வந்த பாடில்லை. ரயில் சென்ற பின்னே விரல் வெளியே வந்தது. சென்னை வந்த அந்த ரயில் வரும் வழியிலேயே விபத்துக்குள்ளானது. பல பயணிகள் உயிர் நீத்தனர். இந்நிகழ்வுக்குப் பின் ஏற்பட்ட மனத்திருப்பத்தால் முழுக்க முழுக்கத் திருக்குர்ஆனை மொழி பெயர்த்து வெளியிடும் பணியில் ஈடுபடலானார்கள்.

சிறந்த எழுத்தாளரான இவர் 1926 பிப்ரவரி திங்கள் 19ம் நாள் திருக்குர்ஆன் மொழி பெயர்ப்புப் பணியைத் துவங்கி ஏறத்தாழ இருபத்தி மூன்று ஆண்டுகள் உழைத்து 1949 மே திங்கள் முதல் நாள் திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பை முதன் முதலில் வெளியிட்டார்கள். அதனை அடிப்படையாகக் கொண்டே இன்று பல தமிழ் மொழிபெயர்ப்புக் குர்ஆன்கள் வெளியிடப்படுகிறது. வல்ல இறைவன் வேதத்தை தாய்மொழியில் உணரும் வாய்ப்பு வாசலைத் திறந்து வைத்த இப்பணி மகத்தானது.

எழுத்துத்துறையில் வல்லமை பெற்றுத் திகழ்ந்த இவரது எழுத்து, பல மொழிகளிலேயும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவர் எழுதிய "இயற்கை மதம்" எனும் ஆய்வு நூல் வணிகப்பிரமுகர் ஒருவரால் மொழி பெயர்க்கப்பட்டு ஹைதராபாத்தில் பிரசுரிக்கப்பட்டது. அதன் உருது மொழி பெயர்ப்பும் ஹைதராபாத்தில் வெளியிடப்பட்டது. முஹம்மது அலி ஜின்னா அவர்கள் "இயற்கை மதம்" ஆங்கில மொழி பெயர்ப்பைப் பாராட்டிக் கடிதம் ஒன்று கூட எழுதினார்கள்.



## மேடை முதலாளி மு.ந.அப்துற்ரஹ்மான் சாஹிப்

மேடை முதலாளி என இந்துக்களாலும், முஸ்லிம்களாலும் அன்புடன் அழைக்கப்பெற்ற தென்காசி மு.நா.அப்துற்ரஹ்மான் சாஹிப் அவர்கள், தமிழகத்தில் இஸ்லாம் வளர, ஆயிரக்கணக்கான தமிழர்கள் இஸ்லாத்தில் இணைய காரணப்புருஷராகத் திகழ்ந்தவர்கள்.

தென்னிந்திய இஷா அத்துல் இஸ்லாம் சபையைத் தோற்றுவித்து அச்சபை மூலம் இஸ்லாத்தைத் தழுவ விரும்பும் பிற மத சகோதரர்களை இஸ்லாத்தில் சேர்ப்பித்தார்கள்.

கிராமம் கிராமமாக, கூட்டம் கூட்டமாக மக்கள் இவரிடம் வந்து இஸ்லாத்தைத் தழுவி உள்ளார்கள். காரணம், தாழ்த்தப்பட்டவர்களாக இருந்த அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய மறுநிமிடம் உயர்த்தப்பட்டவர்களாக மாறி முதலாளியுடன் சரிசமமாக அமர்ந்து உரையாடவும், உணவுண்ணவும், இறைவனை வழிபடவும் செய்வதைக் கண்டு மக்கள் இவரின் இல்லம் வந்து தங்களையும் இஸ்லாத்தில் இணைக்குமாறும், இல்லையேல் இறக்கும் வரை இவர் வீட்டின் முன் அமர்ந்து உண்ணா நோன்பு இருக்கப் போவதாகவும் கூறி இஸ்லாத்தைத் தழுவினர்.

இவ்வாறு மேடை முதலாளி அவர்கள் மூலம் சுமார் பதினாறாயிரம் பேர்களுக்கு மேல் இஸ்லாத்தைத் தழுவி உள்ளனர்.

புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய பல கிராமங்களில் மஸ்ஜித்களையும் இவர் ஏற்படுத்திக் கொடுத்தார். அத்துடன் இஸ்லாத்தை அறிய, குர்ஆன் ஓதப்படிக்க குர்ஆன் மதரஸாக்கள் பலவற்றையும் துவக்கினார்கள். அதிகமான ஏழை குமர்களுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார்கள்.

இஷா அத்துல் இஸ்லாம் சபை மூலம் பல அறப்பணிகள் புரிந்த முதலாளி அவர்கள் அச்சபைக்காக பாளையங்கோட்டையில் ஒரு பகுதியை விலைக்கு வாங்கி, அப்பகுதிக்கு ரஹ்மத்நகர் எனப் பெயரிட்டு அங்கு சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியும், அதன் விடுதியும் அமைய வழிவகுத்தார்கள்.

இவர்களின் பெரும் முயற்சியாலேயே அங்கு ஓர் முஸ்லிம் அநாதை நிலையமும் நிறுவப்பட்டது. கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் இஸ்மாயில் சாஹிப் அவர்களுக்குப் பக்கபலமாகத் திகழ்ந்த இவர்கள், ஒரு நாள் நோயுற்ற காலை இஸ்மாயில் சாஹிப் அவர்கள் இவர்களைக் குறித்து அன்று குற்றாலத்தில் நடைபெற்ற முஸ்லிம் லீக் பொதுக்குழுவில் பேசியதாவது :

சகோதரர் அப்துற்ரஹ்மான் முதலாளி அவர்கள் நாட்டு சுதந்திரத்திற்குப் பின் ஆடிக்கொண்டிருந்த என் கரத்தை வலுப்படுத்தியவர்கள். அவர்கள் செய்து வரும் அறப்பணி மிகவும் உயர்வானது. அவர்களை நடமாடும் "வலி"யாக நான் காண்கின்றேன். "அல்லாஹ் அவர்களுக்குப் பூரண சுகத்தைக் கொடுக்கப் பிரார்த்திப்போமாக!" என்று சொல்லி முடித்ததும்



அங்கு வீற்றிருந்த அனைவரும் கண்களில் நீர்மல்க ஆமீன்! என்று துஆ செய்தனர்.

**கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத்**

முஸ்லிம்கள் மட்டுமின்றி மற்றவர்களாலும் **"காயிதே மில்லத்"** என மரியாதையுடன் அழைக்கப்பெற்ற மிகப் பெரும் தலைவர் கண்ணியத்திற்குரிய இஸ்மாயில் சாஹிப் அவர்கள்.

அரசியலில், சிறந்து விளங்கிய இவர்கள் ஆன்மீகத்திலும் மிகுந்த பேணுதலுடனேயே செயல்பட்டார்கள். அதனாலேயே இன்றளவும் இந்திய மக்களால், குறிப்பாக உலமாக்களால் போற்றவும், பாராட்டப்படவும் செய்கிறார்கள்.

அரசியல்வாதிகளில் பலர் வல்லவர்கள் எனப் பெயர் பெற்றிருக்கலாம். ஆனால், நல்லவர் என்று பெயர் பெற்றவர்கள் சிலரேயாவார்கள். அத்தகையவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர்தான் நம் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்கள்.

சட்டசபை உறுப்பினராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்து இவர்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை. சாதனை மிக்கவை. கேரளாவிலுள்ள மஞ்சேரி தொகுதியில் தொகுதிக்கு செல்லாமலேயே இருமுறை பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தியாவிலேயே மிகப்பெரும் சாதனையை ஏற்படுத்தியவர்.

நெய்வேலியில் ஆய்வு நிகழ்த்தி நிலக்கரி சுரங்கம் அங்கு இருப்பதைக் கண்டுபிடிக்கக் காரணமாகத் திகழ்ந்தவர். சீன அபாயம் வரும் முன்னே அதுபற்றி ஜவஹர்லால் நேருவுக்கு

நேரிடையாய் கடிதம் எழுதி எச்சரிக்கை செய்தவர். அதன்பின் சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்ட பொழுது; தம் ஒரே மகன் மியான்கானைப் போர்க்களத்திற்கு அனுப்பத் தயார் என்று பாராளுமன்றத்தில் கூறி அனைவரையும் பேராச்சரியத்தில் ஆழ்த்தினார்.

இந்தியாவின் பொதுமொழியாக எம்மொழியைத் தேர்வு செய்வது எனும் பிரச்சினை அரசியல் நிர்ணய சபையில் எழுந்த பொழுது தமிழ்நாட்டுப்பிரதிநிதிகளெல்லாம் இந்தி மொழியை ஆதரிக்க, இவர் ஒருவரே இந்திய மொழிகளில் பழமையான மொழி, தொன்மையான மொழி தமிழ்மொழிதான். எனவே, செந்தமிழ் மொழிக்கே பொது மொழியாக அறிவிப்பதற்கான முழுத் தகுதிகள் உண்டு என்று கூறி, தம் தாய்மொழிக்கும், தமிழகத்திற்கும் புகழ் தேடித் தந்து பெருமை சேர்த்தார்.

1972 ஏப்ரல் திங்கள் 5ம் நாள் இறைவன் அளவில் சேர்ந்த இவரது இறுதி ஊர்வலத்தில் முக்கிய பிரமுகர்களும், அமைச்சர்களும் கலந்து கொண்டு நடந்து சென்றார்கள். இவர்களது அடக்கவிடம் திருவல்லிக்கேணி வாலாஜா மஸ்ஜித் வளாகத்தில் அமையப் பெற்றுள்ளது. இவரது மண்ணறையை பலரும் தரிசித்துச் செல்கின்றனர்.

**கல்விக்கடல் எம்.ஆர்.எம். அப்துற்றஹீம்**

"ஆசிரியர்", என்று அனைவராலும் அழைக்கப்பெற்ற பன்னூலாசிரியர். ஈடு இணையற்ற இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் தந்த கல்விக்கடல். எம்.ஆர்.எம்.அப்துற்றஹீம்



அவர்களது எழுத்தால் தமிழர் பலரது வாழ்க்கை ஏற்றம் பெற்றது என்று சொன்னால் அது மிகையாகாது. முப்பது பதிப்புகளுக்கு மேலாக, லட்சம் பிரதிகளுக்கும் அதிகமாக வெளிவந்துள்ள "வாழ்க்கையில் வெற்றி" எனும் அவரது நூலை வாசிக்காதவர்களும், அதன் மூலம் வெற்றி பெறாதவர்களும் அரிதாகவே இருப்பார்கள் என்றே எண்ணுகின்றேன்.

தமிழ் முஸ்லிம்களையும் கடந்து பொதுவான தமிழர்களாலேயே நேசிக்கப்பட்ட சிறந்த ஒரு முஸ்லிம் எழுத்தாளராக இவர்கள் திகழ்ந்தார்கள். இவர்களின் முதல் நூலாகிய "அரேபியாவின் அதிபதி" நூலுக்கு வெ.சாமிநாத சர்மா அவர்கள் மதிப்புரை எழுத, சக்தி காரியாலயம் கோவிந்தன் செட்டியார் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

இஸ்லாமியத் துறைகளின்றி இலக்கியம், சரித்திரம், தத்துவம், வாழ்வியல் எனப் பலத் துறைகளிலும் சிறந்த நூற்களைத் தந்தவர் என்னும் தனிச்சிறப்பு இவர்களுக்கு எப்பொழுதும் உண்டு.

வாழ்க்கைத் தத்துவம் பற்றி மட்டுமே ஏறத்தாழ முப்பத்தி ஐந்து நூற்களும். மார்க்க சம்மந்தமாக சுமார் அறுபத்தி ஐந்து நூற்களும் எழுதியுள்ளார்கள். பல்துறையிலும் எழுதும் ஆற்றல் பெற்ற ஆசிரியர் அவர்கள் இஸ்லாம் சார்ந்தே அதிகம் எழுதியிருப்பது, அவர்களது மார்க்கப்பற்றையே மெய்ப்பித்துக் காட்டுகிறது.

மார்க்கத்தில் அவர்களுக்கு இருந்த முழுமையான ஈடுபாடு வலிமார்கள் வரலாற்றை எழுதத் தூண்டியது. தமிழ்

மக்களின் வாழ்வை நெறிப்படுத்துவதற்கு இந்நூல் ஓர் சிறந்த நூலேயாகும்.

தமிழகம் நபிமார்களின் வாழ்க்கையை முழுமையாக, முறையாக அறிந்து கொள்வதற்காக "நபிமார்கள் வரலாறு" என்னும் சரித்திர நூலை எழுதித் தந்து வரலாற்றுச் சரித்திரத்தில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றுவிட்டார்.

நாயகத்தின் மீது அளவுக்கதிமான நேசம் கொண்டிருந்த ஆசிரியர் அவர்கள், நாயகத்தின் வரலாற்றை "நபிகள் நாயகம்" எனும் பெயரிலும், நாயகத்தின் ஹதீஸ்களை "பெருமானாரின் பொன்மொழிப்பேழை" எனும் பெயரிலும் எழுதித் தந்தார்கள். எனினும் நாயகத்தின் பெயரில் கவிநூல் ஒன்று இயற்ற ஆசை கொண்டு 2,373 மரபுக் கவிகளில் "நபிகள் நாயக காவியம்" எனும் அருமையான கவிநூல் ஒன்றையும் எழுதினார். அவரது இறுதி நூலான இந்நூல் சமீபத்தில்தான் வெளியானது.

உலகில் பிறந்த ஒவ்வொரு தமிழனும் இவரது ஒவ்வொரு நூலையும் படித்து இன்புற வேண்டும், பயன்பெற வேண்டும். 1993 அக்டோபர் திங்கள் பத்தாம் நாள் இவ்வுலகை விட்டுப்பிரிந்த அம்மேதை இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரும் எழுத்தாளராக, அறிஞராகத் திகழ்கிறார்.



## முஸ்லிம்களும் - அரபுத் தமிழும் :

மனிதர்களைப் படைத்து அவர்களுக்கு பேசுவதற்கு மொழிகளையும் கற்றுக்கொடுத்த அல்லாஹ்வே மிக உயர்ந்தவன். அல்லாஹ்வின் வேதம், அல்லாஹ்வின் தூதர் மற்றும் உலகின் பெரும்பகுதி மக்களின் (முஸ்லிம்களின்) நாவில் மொழியப்படும் மொழி அரபு மொழி.

உலக மொழி ஆய்வாளர்களில் சிலர் உலகின் முதல் மொழி அரபு மொழி என்று கூறுகின்றனர். உலகில் தோன்றிய முதல் மனிதர் ஆதம் நபி பேசிய மொழி அரபு மொழி என்று சான்றும் தருகின்றனர்.

மொழிகளிலேயே சொல் வளம் மிக்க மொழியாக அரபு மொழி திகழ்கிறது. அரபு மொழி அளவிற்கு சொல் வளம் மிக்க மொழியாக வேறு எந்த மொழியும் இதுகாறும் இருந்ததில்லை.

அரபு மொழியில் "ஒட்டகம்" என்பதற்கு மட்டுமே ஆயிரம் சொற்கள் இருக்கின்றன. இமாம் முஹம்மதிப்னு அபூபக்ரில் பக்தாதி (ரஹ்) அவர்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை புகழ்ந்து தாம் பாடிய அரபு மொழியிலான "வித்ரிய்யா" எனும் புகழ்பாக்களில் ஒட்டகைக்கு மட்டும் நானூறு சொற்களுக்கும் அதிகமாக பயன்படுத்தியிருப்பது அரபு மொழியின் சொல் வளத்தையே எடுத்துரைக்கின்றது.

உலகில் பேசப்படும் மொழிகளில் எந்த மொழியும் சொர்க்கத்தில் பேசப்படாது. உலகில் வாழும் சுவனத்து மொழி எனும் தனிச்சிறப்பு அரபு மொழிக்கு உண்டு.

அரபு மொழியில் சிறப்புற்று விளங்கிய தமிழக முஸ்லிம்கள் பலர். அவர்களில் ஷைகு சதகத்துல்லா அப்பா, ஷைகு ஸலாஹுத்தீன் அப்பா, உமர் வலியுல்லாஹ், கீழக்கரை ஸையித் முஹம்மத் ஆலிம் புலவர், மாப்பிள்ளை லெப்பை ஆலிம், கீழக்கரை தைக்கா ஸாஹிபு வலியுல்லாஹ், காயல்பட்டினம் நூஹ் ஸாஹிபு லெப்பை போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

அரபியிலும், தமிழிலும் சிறந்து விளங்கிய இவர்கள் அரபியின் மூலம் தமிழுக்காற்றிய சேவைகள் மகத்தானவை. தமிழ்க் கவிகளில் நிறைந்திருந்த சிறந்த கருத்துக்களை அரபியில் செய்யுள்கள் இயற்றி அரபு மொழி அறிந்த, தமிழ்மொழி அறியா மக்களிடம் கொண்டு போய்ச் சேர்த்து தமிழ்மொழிப்புகழை, வானளாவ உயர்த்தினார்கள்.

காயல்பட்டினம் ஷைகு ஸலாஹுத்தீன் அப்பா அவர்கள் மட்டுமே இருநூறுக்கும் அதிகமாக தமிழ்க்கவிதைகளை அரபியில் இயற்றியுள்ளார்கள். அவ்வாறே அரபி மொழியிலுள்ள சிறந்த கவிகளை தமிழில் இயற்றி அக்கருத்துக்களை அரபி மொழி அறியாத தமிழர்கள் சுவைத்து இன்புறுமாறு செய்தனர்.

அவ்வாறே தமிழக இஸ்லாமிய அறிஞர்கள் பலர் அரபியும் தமிழும் கலந்து பல கவிகள் பாடினார்கள். அக்கவிகள்



மூலம் அரபி-தமிழ் என இரு மொழிகளையும் அறிந்தவர்கள் அடையும் இன்பமே இன்பம் தான்.

கீழக்கரை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் இயற்றிய தமிழும் - அரபியும் கலந்த ஓர் பாடல் படித்துப் படித்துப் பூரிக்கத்தக்கது.

"ஷரய்னா பி பணமைனி பழமைணி மதுரமா
அகல்னா ஹுமா ஜம்அன் வஜம்அன் வகூட்டமா
தலக்லக பதனீ முத் அகல்த்து பலாப்பழம்
தஹப்து பி மய்தானின் வஜலஸ்து பி வருத்தமா.

நாங்கள் இரண்டு பணத்திற்கு சுவை மிகுந்த இரண்டு மதுரமான பழங்களை வாங்கி கூட்டம் கூட்டமாகச் சாப்பிட்டோம்.

அவைகளில் பலாப்பழத்தை நான் சாப்பிட்டதும் என் வயிற்றைக் கலக்கியது. வெட்ட வெளிக்குச் சென்று வருத்தத்துடன் நான் அமர்ந்தேன் என்பது இப்பாடலின் பொருள்.

இப்பாடலில் பண, பழ, மதுரமா, கூட்டமா, பலாப்பழம், வருத்தமா ஆகிய ஆறு வார்த்தைகள் தமிழிலும், மற்ற ஏனைய வார்த்தைகள் அரபியிலும் அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற மற்றொரு பாடல்
"வலவ் அல்ஃப ஆமின் முங்கி காக்காச்சி
ஃபீ லபன், கமா மித்ல வெள்ளக் கொக்கு
ஆகான் ஃபீ ஸமான்"

காக்கை போன்ற கருநிறமுள்ளப் பெண்ணை ஆயிரம் ஆண்டுகள் பாலில் மூழ்கியிருக்கச் செய்தாலும் அவள் எக்காலத்திலும் வெள்ளக் கொக்கு போன்று வெண்மையாக ஆகமாட்டாள் என்பது இதன் பொருளாகும். இப்பாடலில் முங்கி, காக்காச்சி, வெள்ளக்கொக்கு, ஆகான் ஆகிய சொற்கள் தமிழ்ச் சொற்களாகும். மீதமுள்ள அனைத்துச் சொற்களும் அரபிச் சொற்களாகும்.

தமிழிலும் - அரபியிலும் சிறந்த புலமைப்பெற்ற முஸ்லிம்கள் இதுபோன்ற சிறந்த போற்றத்தக்க கவிகள் இயற்றியதுடன் தமிழ்மொழிக்கும் அரபு மொழிக்கும் மத்தியில் இணைப்பை ஏற்படுத்தி அதனைப் பலப்படுத்தவும் செய்தனர். அதன் மூலம் உலகுக்கு அரபுத் தமிழ் எனும் புதுமொழியை தந்தனர்.

தமிழை படிக்கத்தெரிந்திடாத மக்களுக்கு தமிழைப் படிப்பதற்கு இலகுவான ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்தனர் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் அரபுத் தமிழ் என்பது அரபி எழுத்தால் தமிழை எழுதுவதுதான். எழுத்துக்களை பார்ப்பதற்கு அரபியாகவும், படிப்பதற்கு தமிழாகவும் இருந்ததுதான் அரபுத் தமிழ்.

அரபி எழுத்துக்கள் இருபத்தி எட்டு. அவைகளுடன் எட்டு எழுத்துக்கள் மட்டுமே சேர்க்கப்பட்டு அரபுத் தமிழ் என தமிழ்மொழிச் சுருக்கமாக பயன்படுத்தப்பட்டது. ஏனெனில் தமிழ்மொழி இருநூற்றி நாற்பத்து ஏழு எழுத்துக்களை கொண்டது. ஆனால் அரபித் தமிழோ வெறும் முப்பத்து ஆறு



எழுத்துக்கள் மட்டுமே கொண்டது; மிக இலகுவாக இருந்ததினாலேயே தமிழினப் பெண்கள் இவ்வரபுத் தமிழை அதிகமாக எழுதவும், படிக்கவும் தெரிந்திருந்தனர்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகம் மற்றும் இலங்கையில் இவ்வரபுத் தமிழ் சிறந்து விளங்கியது. "அரபுத் தமிழ் எங்களின் அன்புத் தமிழ்" எனக்கூறி இலங்கை முஸ்லிம்கள் அரபுத் தமிழ் நூற்களைப் போற்றிப் புகழ்ந்து மிகுந்த ஆர்வத்துடன் படித்தனர்.

கி.பி. 1885ல் இங்கு வாழ்ந்த கார்பா லெப்பை புலவர் என மக்களால் அழைக்கப்பட்ட காதிர் ஷம்சுத்தீன் அவர்கள் ஏராளமான கவிதைகளை அரபுத் தமிழில் இயற்றினார்கள். கி.பி. 1898ம் ஆண்டில் "அஸ்ஸவாப்" எனும் பெயரில் ஒரு அரபுத் தமிழ் பத்திரிக்கையே இலங்கையில் இருந்து வெளிவந்து கொண்டிருந்தது. ஐ.எல்.எம்.அஜீஸ் அவர்கள் அப்பத்திரிக்கையை நடத்தி வந்தார்கள். இங்கு தோன்றிய ஷைகு முஸ்தபா ஆலிம் அவர்கள் ஃபத்ஹுர் ரஹ்மான் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆன், எனும் பெயரில் திருக்குர்ஆனுக்கு ஓர் விரிவுரையை அரபுத் தமிழிலேயே எழுதினார்கள்.

முதன் முதலில் அரபுத் தமிழ் எழுதப்பட்டது தமிழகத்தில்தான். காயல்பட்டணத்தைச் சார்ந்த ஹாபிழ் அமீர் அப்பா அவர்களே இதனை முதன் முதலில் எழுதியதாக கூறப்படுகிறது. எனினும் எந்த நூற்றாண்டிலிருந்து அரபுத் தமிழ் இலக்கியங்கள் பழக்கத்திற்கு வந்தன என்று துல்லியமாக நம்மால் கூற இயலவில்லை.

அரபுத் தமிழ் நூற்களில் ஹிஜ்ரி 1290க்கு பின்னுள்ள நூற்களே நம் கைக்கு கிடைத்துள்ளன. கி.பி. 1837ல் காயல்பட்டினத்தில் பிறந்த மார்க்கமேதை நூஹ் ஆலிம் அவர்கள், பத்ஹுல் கரீம், எனும் பெயரில் ஓர் குர்ஆன் தஃப்ஸீர் எழுதினார்கள்.

அரபித் தமிழில் எழுதப்பட்ட முதல் குர்ஆன் விரிவுரை இதுவேயாகும். புகழ்பெற்று விளங்கிய இந்த தஃப்ஸீரைக் கொண்டு தமிழில் பல குர்ஆன் விரிவுரைகள் எழுதப்பட்டன. ஷாஃபீயி மத்ஹபின் மிக முக்கிய நூற்களில் ஒன்றாக "ஃபத்ஹுல் முயீன்" எனும் நூலை இவர்கள் அரபுத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்தது தமிழுலகுக்கு இவர்கள் செய்த மிகப் பெரும் சேவையாகும்.

காயல்பட்டிணத்தில் சிறந்த மார்க்க மேதையாகத் திகழ்ந்த அல்லாமா ஹபீப் முஹம்மது லெப்பை ஆலிம் அவர்கள் "ஃபுதூஹாதுர் ரஹ்மானிய்யா ஃபீ தஃப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா, எனும் பெயரில் ஒரு குர்ஆன் விரிவுரை எழுதினார்கள். அது போன்று அதுகாறும் எழுதப்படாத ஓர் சிறந்த தஃப்ஸீராக அந்த தஃப்ஸீர் பரிணமித்தது. ஏனெனில் திருமறை வசனங்களுக்கு வெளிப்படையான பொருளும் உண்டு. மறைமுகமான பொருளும் உண்டு. இருவகைப் பொருளும் இந்த தஃப்ஸீரில் கூறப்படுவதால் இதற்கு தனிச்சிறப்பு கிடைக்கப்பெற்றது. புகழ் பெற்ற இந்த தஃப்ஸீர் ஹிஜ்ரி 1296ல் பம்பாயில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. நூற்று முப்பத்தி இரண்டு வருடங்களுக்கு முன்னுள்ள,



கிடைப்பதற்கரிய போற்றத்தக்க சிறந்த தஃப்ஸீரான இந்த தஃப்ஸீர் நாங்கள் ஆலிம் ஸனது பெற்ற மேலப்பாளையம் தாருல் உலூம் உஸ்மானியய்யா அரபிக் கல்லூரியில் இன்றும் இருந்து வருகிறது.

அரபுத் தமிழில் தஃப்ஸீர்கள் இயற்றப்பட்டது போன்று பல ஃபிக்ஹ் நூற்களும் இயற்றப்பட்டன. "ஃபத்ஹுல் மதீன், ஃபத்ஹுஸ் ஸலாம், ஃபத்ஹுத்தையான், மிஃப்தாஹுஸ் ஸுப்ஹானி" போன்ற பல ஃபிக்ஹ் நூற்கள் அரபுத் தமிழில் எழுதப்பட்டதை நாம் குறிப்பிடலாம். மிப்தாஹுஸ்ஸுப்ஹானீயில் ஷாஃபிஈ - ஹனஃபீ என இருமத்ஹப் சட்டங்களும் கூறப்படுகின்றன.

தமிழகத்தில் (குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில்) ஹனஃபி மத்ஹபைச் சார்ந்த ஹனஃபிய்யாக்கள் இன்றும் தம் பிள்ளைகளுக்கு வீடுகளில் பயிற்றுவிக்கின்ற ஹனஃபி மத்ஹப் சட்டங்கள் அடங்கிய நூலான "ஸிம்துஸ்ஸிப்யான்" எனும் நூல் அரபுத் தமிழ் நூலேயாகும். சிறுவயதிலேயே மார்க்கச் சட்டங்களை தெரிந்து கொள்வதற்கு இந்நூல் நன்கு பயன்படுகின்றது. குர்ஆன் மதரஸாக்களிலும் கூட இந்நூல் ஓதி கொடுக்கப்படுகின்றது.

ஹிஜ்ரி பதின்மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த, கொழும்பில் பிறந்ததனால் கொழும்பு ஆலிம் என அறியப்பட்ட ஸையித் முஹம்மத் ஆலிம் அவர்கள் தமிழகம் முழுவதிலும் இருநூற்றுக்கும் அதிகமான குர்ஆன் பாடசாலைகளை அமைத்து சிறுவர்களுக்கு மார்க்கக்கல்வி

போதித்தார். அப்பாடசாலைகள் அனைத்திலும் அரபுத் தமிழ் நூற்களை பாட நூற்களாக அமைத்ததுடன் அவைகளை இலவசமாகவும் வழங்கினார். தஃப்ஸீர், மற்றும் ஃபிக்ஹ்சட்டங்கள் அரபுத் தமிழில் எழுதப்பட்டது போன்று கவிதைகளும் அரபுத் தமிழில் எழுதப்பட்டன.

ஆய்வுக்குரிய நூற்களும் கூட அரபுத் தமிழில் எழுதப்பட்டன. கி.பி.1855ல் அதிராம்பட்டினத்தில் பிறந்த சூஃபி ஹழ்ரத் எனப் புகழ் பெயர் கொண்டு அழைக்கப்பட்ட ஷைகு அப்துல் காதிர் அவர்கள் "மஜ்மவுல் கவாயித்" எனும் ஒரு நூல் அரபுத் தமிழில் எழுதினார்கள். இதில் அரபு நாடு சென்று தாம் நேரில் ஆய்வு செய்த அளவு, எடை மற்றும் மார்க்க சம்மந்தப்பட்ட பல செய்திகளை எடுத்துச் சொல்கிறார்கள். இவர்கள் அதிகமான நூற்கள் அரபியில் எழுதியபோதிலும் ஆய்வுக்குரிய இந்நூலை அவர்கள் அரபுத் தமிழிலேயே எழுதினார்கள்.

இவைகளின்றி பல துறைகளிலும் அறியத்தக்க பல நூற்கள் அரபுத் தமிழில் எழுதப்பட்டுள்ளன. கூறி முடித்திட முடியாத அளவிற்கு சேவைகள் செய்திட்ட நம் முன்னோர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!



## பெரும் புரட்சியாளர் பெருமானார்

உலகத் தலைவர்களில் மிகப் பெரும் சாதனையாளராக, பெரும் புரட்சியாளராக போற்றப்படுபவர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஆவார்கள். மாற்று மத அறிஞர்களில் பலர் முஹம்மத் நபியை மதத் தலைவர் என்பதையும் கடந்து உலகில் தோன்றிய மாபெரும் புரட்சியாளராகவே பார்க்கிறார்கள். காரணம் பெருமானார் புரட்சி செய்யாத துறை என்று ஒரு துறையும் இல்லை. அறிவுத் துறை, அறிவியல் துறை, கல்வித்துறை, சட்டத்துறை, அரசியல் துறை, ஆன்மீகத்துறை என அனைத்துத் துறைகளிலும் மிகச் சிறந்த புரட்சியாளராகத் திகழ்ந்துள்ளார்கள்.

**சமூகப் புரட்சி :**

புரட்சியாளராகப் பிறந்த பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த முதல் புரட்சி சமூகப் புரட்சியாகும். சின்ன வயதில் தான் கடை வீதிக்குச் செல்லும் பொழுது முஹம்மத் (ஸல்) கடைவீதிக்குச் செல்கிறார் உங்களுக்கு எதுவும் வாங்கி வர வேண்டுமா? என்று ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்டித் தட்டி, கேட்டுக் கேட்டு சமூகத் தொண்டு புரிந்தார். சிறுவயதிலேயே சமூகப் புரட்சி செய்தார்.

**அறிவுப் புரட்சி :**

"அய்யாமுல் ஜாஹிலிய்யா", அறியாமைக் காலம் என்று தூற்றப்பட்ட அக்கால அரேபியாவில் மக்கள் அறியாமையிலும், மடமையிலும், மூட நம்பிக்கைகளிலும் மூழ்கித் திளைத்தனர். பார்த்ததையெல்லாம் இறைவன் என்று எண்ணி அவற்றை

வணங்கி வந்தனர். புனிதக் கஃபாவை நிர்வாணமாக வலம் வந்தனர். பாம்பு, தேள் போன்ற விஷப்பிராணிகளையும், இறந்து விட்ட விலங்குகளையும் கூட உணவாக உண்டு வந்தனர். இவ்வாறான அறியாமைகள் கோலோச்சிய அன்றைய அரேபியாவின் அறியாமையை அகற்றி அறிவொளி ஏற்றி அறிவுப் புரட்சி செய்தவர் பெருமானார் (ஸல்) அவர்கள்.

**சுதந்திரப் புரட்சி :**

மிருகங்களை விட கேவலமாக நடத்தப்பட்டு வந்த அடிமைகளை எஜமானர்கள் போன்று நடத்தினார்கள் பெருமானர் (ஸல்) அவர்கள். போர்க்கால அடிப்படையில் முனைப்புடன் செயல்பட்டு, ராஜ தந்திர நடவடிக்கையை மேற்கொண்டு அடிமை முறையை அடியோடு அழித்தொழித்து அடிமைகளையெல்லாம் சுதந்திரப் புருஷர்களாக வாழ வழி வகை செய்து கொடுத்தது அவர்கள் செய்த சுதந்திரப் புரட்சியாகும்.

**கல்விப் புரட்சி :**

அறியாமையில் ஊறித் திளைத்த அரபியர்களுக்கு அறிவுத் தாகத்தை ஏற்படுத்தி கல்வி கற்கச் செய்தார்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள். ஆண்களெல்லாம் ஒரு நாள் உழைப்பில் ஈடுபட்டால் மறுநாள் கல்வியில் ஈடுபடுவார்கள். பகலில் உழைத்தால் இரவில் கல்வி பயில்வார்கள். அவ்வாறே பெண்களும் ஆண்களுக்கு சரிநிகராக கல்வி கற்கப் போட்டி போடும் அளவிற்கு மனித சமூகத்தை மாற்றியமைத்து கல்விப் புரட்சி செய்தவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள்.



**அரசியல் புரட்சி :**

உலக வரலாற்றில் ஃபிர்அவ்ன் முதல் புஷ் வரை ஆட்சியாளர்கள் கைதிகளிடம் காட்டுமிராண்டித்தனமாகவும், அடாவடித் தனமாகவும் நடந்து கொண்டதைப் பார்க்க முடிகிறது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் கைதிகளிடம் காட்டிய அன்பு, இரக்கம், மனிதாபிமானம் இவையெல்லாம் கைதிகளின் உள்ளத்தில் நல்லெண்ணத்தைத் தோற்றுவித்ததுடன் யமாமாவின் மன்னர் துமாமா போன்றோரை இஸ்லாத்தில் இணையுமாறும் செய்தது. கைதிகள் வரலாற்றில் பெருமானாரின் நடைமுறை செயல்கள் ஆட்சியாளர்களுக்கு முன்னுதாரணமாகவும், அரசியல் புரட்சியாகவும் போற்றப்படுகின்றன.

**யுத்தப் புரட்சி :**

ஒரு மாபெரும் தலைவரின் அரசியல் வாழ்வில் போராட்டம், யுத்தம் என்பதெல்லாம் தவிர்க்க முடியாதவை. ஆனாலும் அவற்றை அவர் எவ்வாறு எதிர்கொண்டார் என்பதுதான் முக்கியமாக கவனிக்கத்தக்கதாகும். குறைஷிகள், யூதர்கள், பாலைவன அரபிகள் என முப்பிரிவார் ஒன்று சேர்ந்து தாக்க வந்த பொழுது, பெருமானார் (ஸல்) அவர்கள் அப்படைகளை எதிர்கொண்ட புதுமை, அகழ் தோண்டி அவர்களை வெற்றி கொண்ட சாதனை அன்று அரபகத்தில் அவர்கள் செய்த மாபெரும் யுத்தப் புரட்சியாகும்.

**சட்டப் புரட்சி :**

மது, சூது, கொலை, கொள்ளை, கற்பழிப்பு என குற்றங்கள் மலிந்து காணப்பட்டபொழுது அவற்றை முறையான

சட்டங்களைப் பிறப்பித்து, அக்குற்றங்களை கட்டுப் படுத்தினார்கள். திருமணம், சொத்துரிமை போன்ற அனைத்து சட்டங்களையும் ஒழுங்குபடுத்தி சீர்செய்தார்கள். இதுவெல்லாம் பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த சட்டப் புரட்சியாகும்.

**பொருளாதாரப்புரட்சி :**

வட்டி அமைப்பிலான பொருளாதார முறை அன்று முதல் இன்று வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பொழுது வட்டியில்லாத பொருளாதார முறையை அறிமுகப்படுத்தியதுடன், நடைமுறை சாத்தியம் என வட்டியில்லாத பொருளாதார அமைப்பு முறையை நடைமுறைப்படுத்திக் காட்டியவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள். இன்றையப் பொருளாதார நிபுணர்களும் கூட வட்டி இல்லாத பொருளாதாரம்தான் வெற்றிக்கு வழி வகுக்கும் என ஒத்துக் கொள்ளும் அளவிற்கு பெருமானார் (ஸல்) அவர்களின் பொருளாதாரப் புரட்சி அமைந்திருந்தது உண்மையிலேயே போற்றிப் புகழத் தக்க பொருளாதார கொள்கையாகும்.

**பெண்ணினப் புரட்சி :**

அன்றைய அரேபியாவில் ஒரு மங்கையைப் பல ஆடவர்கள் மணமுடிக்கும் பரிதாபம் நிலவியபொழுது, தம் பெண் பிள்ளையை ஒருவனுக்கு மணமுடித்துக் கொடுப்பது தம் சுய கவுரவத்திற்கு இழுக்கு எனக் கருதப்பட்டு பெண் பிள்ளையை பெறுவதை கேவலமாக எண்ணப்பட்ட பொழுது, உயிருடன் பெண்களை பாலையின் சுடு மணலில் உயிருடன் புதைத்த பொழுது, பெண்களுக்கு சொத்துரிமை மறுக்கப்பட்டபொழுது, பெண்ணினத்திற்காகப் போராடி அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை அகற்றி, அவர்களின் உரிமைகளை



அவர்களுக்கு அளித்ததுடன் இன்றுவரை பெண்களின் சுய மரியாதையும், கவுரவமும் காக்கப்படும் அளவிற்கு பெண்ணினப் புரட்சி செய்தவர் பெருமானார் (ஸல்) அவர்கள்.

**தலைமைப் புரட்சி :**

தொண்டர்களுடன் சகஜமாக செயல்படுவது தலைவருக்கு இழுக்கு எனக் கருதப்படும் வேளையில் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தம் தொண்டர்களை சக தோழர்களாக அறிவித்து அவர்களுடன் நடந்து கொண்ட விதம் உலக வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கிறது. பெரும் வியப்பாகவே இருக்கிறது.

ஒரு பிரயாணத்தின் போது சமையலுக்காக தோழர்கள் ஒவ்வொருவரும் ஒரு வேலையில் ஈடுபட்ட பொழுது தலைவர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் விறகு பொறுக்கும் பொறுப்பைத் தாமே எடுத்துக் கொண்டு அதனைச் செய்ததுடன். "மற்றவர்களை தமக்குக் கீழானவர்களாக நினைப்பவர்களை இறைவன் விரும்பவில்லை" என்றும் கூறியது, தலைமைத் துவத்தில் அவர்கள் செய்த ஓர் புரட்சியாக அமைகிறது.

**ஆன்மீகப் புரட்சி :**

பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த புரட்சிகளில் மகத்தான புரட்சி ஆன்மீகப் புரட்சியாகும். மதீனாவிற்கு வந்ததும் உடனே இறை இல்லத்தை அமைத்தார்கள். மதுவிலும், மாதுவிலும் இன்பம் கண்டவர்களை இறைத் தியானத்தில் இன்புற்றுத் திளைக்கச் செய்தார்கள். உலக அளவில் இஸ்லாம் பரவ வழி வகுத்தார்கள். கால ஓட்டத்தில் அழிந்து போகா

வண்ணம் யுக முடிவு நாள் வரை நிலைத்திருக்கும் வரையில் இஸ்லாமிய மார்க்கத்தை நிலை நாட்டினார்கள்.

**அறிவியல் புரட்சி :**

அறிவியல் என்றால் என்னவென்று அறியாத அன்றைய காலத்திலேயே இன்றைய விஞ்ஞானிகளும், அறிவியலாளர்களும் வியக்கும் வண்ணம் அறிவியல் கருத்துக்களை கூறினார்கள். ஆய்வாளர்கள் இன்று கூறும் அறிவியல் முடிவுகளுக்கு அன்றே அஸ்திவாரமிட்டார்கள்.

அன்று ஒரு நாள் சூரிய கிரகணம் ஏற்பட்ட பொழுது சூரியனும், சந்திரனும் இறைவனின் மாபெரும் சான்றுகளில் உள்ளவை. அவை இறை ஆணைப்படி இயங்குகின்றன. யாருடைய வாழ்விற்கோ, சாவிற்கோ அவை கிரகணம் பிடிப்பதில்லை என்றும், வயிற்றில் மூன்று பகுதிகளாக்கி ஒரு பகுதி உணவு, ஒரு பகுதி தண்ணீர், மூன்றாவது பகுதி ஒன்றுமில்லாமல் காலியாக இருக்க வேண்டும் என்றெல்லாம் கூறி, இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு அன்றே வித்தூன்றிய விந்தை என பெருமானாரின் அறிவியல் புட்சி இன்றும் பல அறிவியலாளரை உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறது.

எந்தத் துறையாக இருப்பினும் அந்த துறையில் வெற்றி காண விரும்பும் மனிதன் இறைவனின் இறுதித் தூதராய், உலகில் பெரும் புரட்சியாளராய் வந்துதித்த பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் வழி முறையை, வழி காட்டுதலை எடுத்து நடப்பின் வெற்றி நிச்சயம்! வெற்றி! வெற்றி! வெற்றி!